


# The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 -1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 6 இதழ் - 4 ஜுலை-ஆகஸ்ட் 2020




R5181

## A General View of the Messianic Kingdom

## மேசியாவின் ராஜ்யத்தைக் குறித்த ஒரு பொதுவான கண்ணோட்டம்

*“யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கிவரக் கண்டேன்.”* வெளிப்படுத்தல் 21:2

பரலோக தேவனானவர் எதிர்காலத்தில் பூமியிலே ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்கிற தெய்வீக வாக்குத்தத்தத்தை தானியேல் தீர்க்கதரிசி மற்றும் மற்றவர்கள் மூலமாக இஸ்ரயேலுக்கு கொடுத்திருந்தார்; இது “வானத்தின் கீழெங்கும்” உலகலாவிய ராஜ்யமாக இருக்கும்; என்றென்றைக்குமான இராஜ்யமாக இருக்கும். (தானியேல் 2:44; 7:27; ஏசாயா 2:2-4 முதலானவை) விழுந்துபோன மனுக்குலத்தின் தேவைகளை சந்திக்கவும், மனுக்குலத்தை மறுபடியும் தெய்வீக ஏற்பாடுகளுக்கு இசைவாக கொண்டுவரவும், மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட வேண்டியிருக்கிறது. இந்த ராஜ்யம் மனுக்குலத்திற்கும் தெய்வீக ராஜ்யத்திற்கும் இடையே குறுக்கீடு செய்யும், ஏனெனில் விழுந்து போன ஆதாமின் இனம் பலவீனமாக இருப்பதால் தெய்வீக சட்டத்தின் தேவைகளை அது சந்திக்க இயலாதிருக்கிறது.

பிரபஞ்சத்தின் மகா சக்கரவர்த்தியாகிய, யேகோவா தேவன் மேசியாவின் ராஜ்யத்தை நமது கர்த்தராகிய இயேசுவிடம் கொடுத்திருக்கிறார். அந்த ராஜ்யத்தின் முதல் பிரதிநிதி அவர்தான். நமது கர்த்தர் பூமியில் இருந்தபோது அவமானத்துடனும் கொடுமையாகவும் நடத்தப்பட்டார். சுவிசேஷ யுகம் முழுவதும் அவரது சீஷர்கள் இதே விதமாகவே நடத்தப்பட்டனர். அவர்களை பிரதிநிதியாக குறிக்கிற அந்த ராஜ்யம் நிச்சயம் ஸ்தாபிக்கப்படும். பிதாவானவர் முன்னரே நமது கர்த்தரை ராஜாவாக நியமித்திருக்கிறார். (சங்கீதம் 2:6) சீக்கிரத்தில் அவரது உத்தியோகத்திற்கான மகிமையையும் வல்லமையையும் தேவன் அவருக்கு கொடுப்பார்.

இந்த ராஜ்யத்தின் நோக்கமும் குறிக்கோளும் வேதவாக்கியங்களில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அது ஸ்தாபிக்கப்படும்போது அதன் குடிகளில் சிலர் மரண நித்திரையிலிருப்பார்கள்; மற்றவர்கள் விழித்திருப்பார்கள். அந்த சமயத்தில் அவர்கள் ஜீவனைப் பெற்றிருந்தாலும் விழுந்து போன இனத்தில் யாரும் தேவனால் அங்கீகரிக்கப்பட மாட்டார்கள். முழு உலகத்தின் கட்டுப்பாடும் நமது கர்த்தரின் கைகளிலிருக்கும். நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆபிரகாமிடம், அவருக்குள்ளும் அவரது வித்திற்குள்ளும் பூமியின் சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்று உரைக்கப்பட்ட வாக்குத்தத்தத்திற்கிசைய, நமது கர்த்தர் தமது சொந்த இரத்தத்தினால் உலகத்தை வாங்கினவராகவும் அதை ஆசீர்வதிக்க தகுதியுள்ளவராகவும் இருக்கிறார். (ஆதியாகமம் 12:3;22:18; கலாத்தியர் 3:8, 16, 29)

பரலோக ராஜ்யம் நமது கர்த்தர் முன்னுரைத்ததுபோல எந்தவித அறிவிப்பும் இல்லாமல் வரும். (லூக்கா 17:20) இந்த அனைத்து கருத்துகளுடன், ராஜ்யமானது பூமிக்குரிய ராஜ்யமாக இருக்கும் என்று நினைக்கக் கூடாது, மாறாக, அதை சுதந்தரித்துக் கொள்பவர்கள் அதற்குள் நுழைவதற்கு முன் ஆவியின் ஜீவிகளாக ஆக வேண்டும் என்று வேதவாக்கியங்கள் போதிக்கின்றன. (1 கொரிந்தியர் 15:50-52) உயிரோடிருக்கும் அங்கங்கள் ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, மறுரூபமாக்கப்படுவார்கள். மரித்தவர்கள் எழுந்து மறுரூபத்தைப் பெற்றுக் கொண்டு கர்த்தரோடு என்றென்றைக்கும் இருப்பார்கள்.

கர்த்தரும் மகிமையடைந்த சபை அனைவரும் ஆவியின் ஜீவியாக இருந்து, மனுக்குலத்தால் காணப்படாமல் உலக காரியங்களை நிர்வகிக்க கூடியவர்களாக இருப்பார்கள். அந்த நாளின் தண்டனை, பரிசு மற்றும் நியாயத்தீர்ப்பில் வெளிப்படுவார்கள். ராஜாவுக்கும் ராஜ்யத்துக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், ராஜாவானவர் அதிகாரம் உடையவராக இருப்பார், ஆனால் ராஜ்யமானது அவரது உடன் அங்கங்களையும் அரசுரிமையையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. இதில் உடன் அங்கங்கள் என்பது அவரது சிங்காசனத்தில் அவரோடு உட்காரப் போகிற சபையைக் குறிக்கிறது.

சபையானது எப்பொழுதும் பரலோக நிலைமையில் தான் இருக்கும், சபையானது ஒரே இடத்தில் தான் இருக்கும் வேறு இடத்திற்கு போக முடியாது என்பதாக எந்தவித குறிப்பும் வேதவாக்கியங்களில் இல்லை. நமக்கு கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு என்னவென்றால் அது கொஞ்சகாலம் பூமியில் இருக்காது என்பதும், மகா ராஜாவாகிய யேகோவா தேவனுடைய பிரசன்னத்திற்கு கொண்டுவரப்படும் என்பதும் ஆகும். அது பொற்சரிகையிலான மகிமையான வஸ்திரத்தினால் “சித்திரததையலாடையினால்” அலங்கரிக்கப்பட்டிருக்கும். (சங்கீதம் 45:13-15) இந்த கூற்று மறைபொருளான அர்த்தம் உடையது. இது அழகாக வார்க்கப்பட்ட குணலட்சணத்தை குறிக்கிறது. இதன் மூலமே இது கிறிஸ்துவின் சரீரத்தின் உண்மையான அங்கமாகிறது.

### தெய்வீக அரசாங்கத்தின் இருக்கை

புதுசிருஷ்டி பூமியிலிருந்தாலும் தூரத்தில் இருந்தாலும் அவர்கள் ஆவியின் சுபாவத்தில் இருப்பார்கள். அவர்களது பிரத்தியேகமான இடம் தெய்வீக நிலை. பல்வேறு ஆவியின் ஜீவிகளுக்கான அவரவர்களுக்கான பிரத்தியேகமான

தனிப்பட்ட இடம் இருந்தாலும், கிறிஸ்துவின் சபைக்கு அங்கே இடமில்லை. அது தனது கர்த்தருக்கு அடுத்த ஒரு நிலையை அடையும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தரானவர், மற்ற அனைத்து ஆவியின் ஜீவிகளின் நிலைகளைக் காட்டிலும் உயர்ந்த இடத்தில், உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்தில் இருக்கிறார். (எபிரேயர் 1:3)

சபைக்கான இந்த இடம் பிதாவானவருடைய மனதில் இருந்தாலும், அது நமது கர்த்தரின் முதலாம் வருகையின் காலத்தில் ஆயத்தம் பண்ணப்படாமலிருந்தது. இந்த இடத்தை ஆயத்தம் பண்ணவே நமது கர்த்தர் பரலோகத்திற்கு எழுந்தருளினார். (யோவான் 14:2,3) இதை சபையின் சார்பாக தமது புண்ணியத்தை சாட்டுதலின் மூலம் செய்தார். அதன்மூலம அவர்கள் தற்காலத்தில் அவரது பாடுகளில் பங்குபெறவும் வரக்கூடிய மகிமையில் அவருடன் கூட பங்கு பெறவும் செய்தார். இப்படியாக எல்லாவற்றிற்கும் மேலான இடத்திற்கு சபையானது செல்லும்படி வழியை ஆயத்தப்படுத்தினார்.

கர்த்தரும் சபையும் பிதாவானவரின் பிரசன்னத்தில் இருந்து கொண்டு, அதே சமயத்தில் பூமியின் அரசாங்கத்தை எப்படி நடத்த முடியும் என்பதைப்பற்றிய ஆவிக்குரிய நிலைமைக்குறித்த காரியங்கள் போதுமான அளவுக்கு நமக்கு சொல்லப்படவில்லை. இது நடக்கக்கூடிய காரியமாக இருந்தாலும் ஒருவேளை அது ஞானமான ஏற்பாடாக இல்லாதிருக்கலாம். ஒருவேளை அவர்கள் உடனடியாக பிதாவானவரின் பிரசனத்தில் இராமல் பூமியை நெருங்கியிருப்பது அவசியமானதாக இருக்கலாம்.

சாத்தானுடைய ராஜ்யம் இப்பொழுது இருப்பதுபோல கிறிஸ்துவும் இயேசுவும் சபையும் பூமியுடன் மிகவும் நெருக்கமாக இருக்கும் என்பது நமது எண்ணமாக இருக்கிறது. சாத்தானுடைய அரசாங்கத்தின் இருக்கை டார்டரஸ் (Tartarus) எனப்பட்ட வானமண்டலம். சாத்தானும் அவனது ஆட்களும் மற்றும் விழுந்துபோன தூதர்களும் பாவத்தினிமித்தம் அவர்களது சொந்த நிலையிலிருந்து எங்கே தள்ளப்பட்டார்களோ அங்கே பூமிக்கருகே இருக்கிறார்கள். அவர்கள் மனுக்குலத்தினரிடையே தீமையான செயல்களை செய்து வந்தாலும், அவர்களால் காணப்படாமல் இருக்கிறார்கள். சாத்தான் சிலசமயங்களில் வசியம் பண்ணுதல் மூலமாகவும், அறியாமை மற்றும் மூடநம்பிக்கைகள் மூலமாகவும் துஷ்டர்களாக இருக்கக்கூடிய ஆண்களையும் ஸ்தீரிகளையும் தனது மனித முகவர்களாக பெற்றிருக்கிறான். எனினும் சீக்கிரத்தில் சாத்தான் ஓர் ஆயிர வருடம் கட்டப்படுவான் என்றும் அவன் இருக்கிற இடம் வெறுமையாக இருக்கும் என்றும் வேதவாக்கியங்கள் நமக்கு போதிக்கின்றன. (வெளிப்படுத்தல் 20:1–3)

கர்த்தரின் இரண்டாம் வருகையில் சபையானது அவரோடு கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது என்று பரிசுத்த பவுல் நமக்கு அறிவிக்கிறார். (1 தெச லோனிக்கேயர் 4:15–17) எனினும் அவர்கள் டார்டரஸ் என்ற இடத்தை எடுத்துக் கொள்வார்கள் என்று இது பொருள்படாது. அவர்கள் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்பார்கள் என்று நாம் அறிவிக்கப்படுகிறோம். தெய்வீக சித்தத்திற்கு இசைவாகவும் தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றும் படியாகவும் கர்த்தர் எங்கே இருப்பாரோ அங்கே சபையும் இருக்கும். மனிதர்கள் சாத்தானையும் விழுந்து போன தூதர்களையும் காண முடியாததைப்போல, கர்த்தரையும் அவரது சபையையும் அவர்கள் காணமாட்டார்கள். காணமுடியாதவர்களாக இருந்தாலும், கிறிஸ்துவும் சபையும் பூமியுடன் கூட மிகவும் நெருக்கமாக இருப்பார்கள். அவர்கள் நல்ல வேலையை, வல்லமையுள்ள வேலையை ஆவியின் தளத்தில் செய்வார்கள். அவர்கள் தேவனுக்கு முன்பாக ராஜாக்களும் ஆசாரியர்களுமாயிருந்து, பூமியிலே அரசாளுவார்கள். (வெளிப்படுத்தல் 5:10)

இந்த கிறிஸ்துவுக்கு கூட பல்வேறு முகவர்கள் இருப்பார்கள். திரள் கூட்டத்தார் சந்தேகத்திற்கிடமில்லாமல் அவர்களோடுகூட இணைந்திருப்பார்கள். சாத்தான் பூமியிலே பூமிக்குரிய முகவர்களை பெற்றிருந்ததைப் போல இவர்களும் பெற்றிருப்பார்கள். கிறிஸ்துவின் பூமிக்குரிய முகவர்களாக பழைய ஏற்பாட்டுகால விசுவாசிகள் இருப்பார்கள். இவர்கள் மேசியாவின் ராஜ்யத்தில் விருப்பத்துடன் புத்தியுள்ள ஊழியங்களை செய்வார்கள்.

## பழங்கால பாத்திரரின் எதிர்கால பாடுகள்

ஏசாயா 11:9 இன் அறிக்கையானது: "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை." தானியேல் 2:35, 44, 45 வசனங்களை ஒப்பிடும் போது தீர்க்கதரிசனத்தில் பர்வதம் என்பது ஒரு ராஜ்யத்தை குறிப்பதாக உணர்ந்து கொள்ளுகிறோம். மேசியாவின ராஜ்யத்தில் தீங்கு செய்பவர்மேல் ஒரு அடக்குதல் இருக்கும் என்று ஏசாயாவின் அறிக்கையிலிருந்து காணப்படுகிறது. அதே சமயம் ராஜ்யமானது வளரவேண்டும் எனறு தானியேலின் கூற்று அறிவிப்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். தீர்க்கதரிசனத்தில் கல்லானது ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற்கு இன்னும் அநேக வருடங்கள் செல்லும்.

ராஜ்யமானது அதிகாரத்துக்கு வந்தவுடனே பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்கள் பரிபூரண மனித ஜீவிகளாக மரித்தோரிலிருந்து எழுந்துவருவார்கள். இந்த தேவனுடைய விசுவாசமுள்ள ஊழியர்கள் பூமியெங்கும் பிரபுக்களாக இருப்பார்கள் என்று சங்கீதம் 45:16 தெளிவாக குறிப்பிடுகிறது. எதிர்பார்த்தபடி அவர்கள் மீதமுள்ள மனுக்குலத்திற்கு போதிக்கக் கூடிய ஒரு மகா பெரிய வேலையை உடையவர்களாக இருப்பார்கள். நடப்பிக்க வேண்டிய இந்த ஊழியத்தை அவர்கள் பெற்றிருக்கும்போது, அதை அவர்கள் செய்வதில் அதிக கனத்தை பெறுவார்கள்; ஏனெனில் கர்த்தருக்கு ஊழியம் செய்வது எப்பொழுதுமே கனத்திற்கு உரியதாக இருக்கும்.

பழைய ஏற்பாட்டுகால பாத்திரர்களுக்கு கொடுக்கப்படும் ஊழியம், தேவன் சாதரணமாக ஒரு பரிபூரண மனிதனிடம் ஒப்படைப்பதைவிட மேலானதாக இருக்கும். அபூரண, விழுந்து போன ஜீவிகளிடம் தொடர்பு கொண்டு, அவர்களை பாவத்திலிருந்தும் அபூரணத்திலிருந்தும் மீட்படைய உதவி புரிவதே இந்த ஊழியத்தின் ஒரு பகுதியாக இருக்கும். ஒரு வகையில் பார்க்கும் பொழுது இந்த வேலை விரும்பக்கூடிய ஊழியமாக இருந்தாலும் ஒரு பூரண மனிதன் விரும்பக்கூடிய ஒரு ஊழியமாக இருக்காது. இந்த பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்கள் பரிபூரணமாக கல்லறையிலிருந்து எழுந்து வருவார்கள். ஆனால் ஆயிரம் வருடம் முழுவதும் அவர்கள் அபூரண சுற்றுச் சூழ்நிலைகளுக்கிடையே தான் இருப்பார்கள். உலக மனுக்குலம் இப்பொழுது இருப்பதைப் போல அப்பொழுதும்

அபூரணர்களாகவே இருப்பார்கள். எனினும் அவர்கள் படிப்படியாக முடிவில் பூரணத்திற்கு வருவார்கள்.

ஆதாம் பூரணராக இருந்தார். அவர் பாவம் செய்த பிறகு பூமியை பண்படுத்தவும், அவர் எடுக்கப்பட்ட மண்ணுக்குத்திரும்பும் வரை முள் மற்றும் குருக்குகளுக்கிடையே போராடவும் ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்திவிடப்பட்டார். அவர் தனது சுற்றுப்புற சூழ்நிலையினிமித்தம் நிச்சயமாக அவர் கஷ்டப்பட்டிருப்பார். நமது கர்த்தர் இயேசுவும் பூரணர். அவர் பரலோக மகிமையை மாத்திரம் விட்டுவிடாமல், முப்பத்தி மூன்றரை ஆண்டுகள் விழுந்து போன இனத்தின் வலிகளையும் வருத்தங்களையும் தொடர்ந்து சாட்சி கொடுத்து அபூரண சூழ்நிலைகளுக்கிடையே இருந்தார். இப்படிப்பட்ட சூழ்நிலைகளே அவரது பலியின் பங்கில் பெரும் பகுதியாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அவர் பரிபூரணராக இருந்ததால் அது அவரது பாடுகளை அதிகப்படுத்தியது.

பரிபூரண மனிதர்களாக இருக்கப் போகிற பழைய ஏற்பாட்டுகால பாத்திரர்கள் ஆயிரம் வருட யுகத்தில் ஓர் அபூரண சுற்றுப்புற சூழ்நிலைகளில் இருப்பார்கள். இது அவர்கள் பாடுகளுக்கு கீழாக போவதுபோல காணப்படும். அவர்கள் உண்மையுடன் சர்வ வல்லவருக்கு ஊழியம் செய்தால், அவர்கள் கேட்கக் கூடியதைக் காட்டிலும் அபரிமிதமாக அவர்களுக்கு தேவன் பரிசளிப்பார். அவர்கள் இந்த கீழ்ப்படிதலை தொடர்ந்து பராமரித்தால் பிதாவனவர் என்ன பரிசு தருவார் என்று யாராவது கேட்டால் நாம் இதுவரை பார்த்த வகையில் ஆயிரம் வருட யுகத்தில் எந்தவித விசேஷித்த பரிசையும் பெற மாட்டார்கள் என்று பதிலளிக்கிறோம். ஆனால் தேவனுடைய கருத்தில் இது ஒரு மெச்சத்தகுந்த வேலையாக இருந்து, அவர் அதற்கு பரிசளிக்க சந்தோஷப்படுவார் என்று நாங்கள் நினைக்கிறோம். அவர் தமது உண்மையுள்ள ஊழியர்களிடம் அவர் தொடர்பு கொள்ளும் முறையாக இது காணப்படுகிறது. பிதாவானவரின் சித்தத்தை நிறைவேற்ற நமது கர்த்தராகிய இயேசு மிகவும் மகிழ்ச்சியடைகிறவராக இருந்ததால், தேவன் அவருக்கு பரிசளித்தார். நமது தேவன் கிருபையுள்ளவர்!

இந்த பழைய ஏற்பாட்டுகால பாத்திரர்களுக்கு ஆவிக்குரிய சுபாவத்தைக் கொடுப்பதைக் காட்டிலும் பெரிய பரிசு எதையும் நாம் நினைக்க முடியாது. அவர்கள் வெகு காலத்திற்கு முன்பு, பாவத்திற்கு இடங்கொடுப்பதைக் காட்டிலும் பாடுகளை தெரிந்து கொண்டு தங்களது விசுவாசத்தை நிரூபித்தார்கள். எனினும் அவர்கள் ஆவியின் ஜீவிகளாக ஆக்கப்படுவார்கள் என்பதற்கு தெளிவாக கூறக்கூடிய வேதவாக்கியங்கள் எதுவும் இல்லை. இந்த காரியத்தைக் குறித்த நமது கருத்தெல்லாம் முற்றிலும் யூகமாகும்.

### உண்மையுள்ள பிரபுக்களுக்கு எதிர்கால பரிசு

பழைய ஏற்பாட்டு கால பாத்திரர் ஆவியின் சுபாவத்தில் பங்கு பெற்று திரள் கூட்ட வகுப்பாரின் அங்கங்களாவார்கள் என்ற யூகத்திற்கு ரூபகாரமாக இருந்தது, அவர்கள் லேவி கோத்திரத்தாரை அடையாளமாக காட்டுவதாக காணப்படுவதேயாகும். இந்த கோத்திரத்தாருக்கு நிலங்களில் சுதந்தரம் இல்லாதது, பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்கள் பூமியில் சுதந்தரம் இல்லாதை குறிப்பதாக காணப்படுகிறது. அவர்கள் பூமியெல்லாம் பிரபுக்களாக உயர்த்தப்படுவதை நாம் நினைக்க வேண்டும். (சங்கீதம் 45:16) இது ஒரு அபரிமிதமான பரிசாக இருக்கும். பழைய ஏற்பாட்டு கால பாத்திரரைக் காட்டிலும் அதிகமான தீவிர அனுபவங்களை கடந்து வராத திரள் கூட்டத்தாருக்கு தேவன் ஆவிக்குரிய சுபாவத்தை கொடுக்கப்போகிற காரணத்தாலும் ஆவிக்குரிய தளத்திலேயே மிகவும் கீழான நிலை, மாம்சீக நிலையில் உயர்ந்த நிலையாகிய மனித நிலையைக் காட்டிலும் மேலானதாக இருக்கும் காரணத்தாலும் திரள் கூட்டத்தார் பழைய ஏற்பாட்டுகால பாத்திரரைக் காட்டிலும் மேலான ஆசீர்வாதங்களை பெறக்கூடியவர்களாக இருப்பார்கள்.

பரலோக பிதாவானவர், திரள் கூட்டத்தாருக்கு ஆவிக்குரிய தளத்தில் ஒரு இடத்தை ஏற்பாடு செய்ய விருப்பம் உள்ளவராயிருக்கிறபடியாலும், அவர், சில பொதுவான நீதியான ஒழுங்குகளின்படி கிரியையை நடத்திக்கொண்டு வருகிறபடியாலும், மீதமுள்ள மனுக்குலத்தாரைக் காட்டிலும், பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்களுக்கு மேன்மையானதை வைத்திருப்பார் என்று நினைக்க நமது மனதை திருப்புகிறோம். பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்களைக் காட்டிலும் மேலான விசுவாசத்தை திரள் கூட்டத்தார் மெய்ப்பித்துக் காட்டவில்லை என்பதை நாம் உணருகிறோம். ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கை பலியாக கொடுக்க அழைக்கப்பட்ட பொழுது, திரள் கூட்டத்தார் அழைக்கப்பட்ட போது வெளிபபடுத்தியதைக் காட்டிலும் அவர் உயர்ந்த மேலான விசுவாசத்தை வெளிப்படுத்திக் காண்பித்தார்.

மேலும் ஆதியாகமம் 17:8 இல் தேவன் ஆபிரகாமிடம் கூறியதாவது: ''நீ பரதேசியாய்த் தங்கிவருகிற கானான் தேசம் முழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாய்க் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன்.'' இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பின்னர், பரிசுத்த ஸ்தேவான், வாக்குத்தத்தம் பண்ணபட்ட ஒரு அடி நிலத்தையாகிலும் அவருடைய கையாட்சிக்கு கொடுக்கவில்லை என்று கூறினார்; (அப்போஸ்தலர் 7:5) ஆனால் ஆபிரகாம் அதைப் பெற்று அதன்பிறகு தனது சந்ததியினருக்கு தருவார் என்று கூறினார். தேசமானது ஆபிரகாமுக்கும் அவரது உடன் பாத்திரர்களுக்கும் கொடுக்கப்பட்டு, பிறகு அதை அவரது வித்துக்கும் பொதுவான மனுக்குலத்திற்கும் விட்டுவிடுவார்கள் என்றால், இந்த கருத்து பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்கள் ஆவியின் சுபாவத்திற்கு கடந்து செல்வார்கள் என்று குறிப்பாக உணர்த்துவதாக காணப்படுகிறது.

இதே கருத்து வெளிப்படுத்தின விசேஷத்திலும் சித்தரிக்கப் பட்டிருப்பதாகக் காணப்படுகிறது. ஆயிரம் வருடம் முடியும் போது சாத்தான் விடுதலையாகி, ஜனங்கள் எந்த அளவுக்கு தேவனுக்கும் நீதியின் கொள்கைகளுக்கும் விசுவாமாயிருக்கிறார்கள் என்று அவர்களது மனதை சோதிக்கும்படி செல்வான். இந்த சோதனையின் முடிவில் சிலர் விழுந்து போவார்கள். (வெளிப்படுத்தல் 20:7-10)

நாம் வாசிப்பதாவது; ''அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளயத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப் போட்டது.'' (வெளிப்படுத்தல் 20:9) ''பிரியமான நகரம்'' என்பது புதிய எருசலேம், மகிமையடைந்த சபையைக் குறிக்கிறது, மாம்சத்தில் உள்ள சபையை அல்ல. சாத்தானால் தூண்டப்படுகிற கலகக்காரர்கள் பூமிக்குரிய பிரபுக்களுக்கு

மாத்திரமல்ல கிறிஸ்துவுக்கும் எதிரானவர்கள்.

அந்த காலக்கட்டத்தில் பரிபூரணத்தையும் சக்தியையும் அடைந்து ஜனங்கள் பரிசுத்தவான்களுடைய பாளயத்தை வளைந்துகொள்ள தங்களை உறுதிப்படுத்துவார்கள். சபையானது ஆவியின் ஜீவிகளாக இருப்பதால், மனிதர்கள் காணக்கூடாத ஆவியின் ஜீவிகளை தாக்கமுடியதாததால், அவர்கள் வளைந்து கொள்வது சபையை அல்ல என்பது உறுதியாகிறது. மகா பிரிட்டனில் ஜனங்கள் எதிர்ப்பை தெரிவிக்க பார்லிமெண்ட்டுக்கு சென்றது போல, மனுக்குல கலக்கார வகுப்பார் தங்களது உண்மையுள்ள பிரபுகளுக்கு எதிராக செல்வார்கள். அவர்கள் இப்படியாக சொல்லக் கேட்போம் என்று யூகிக்கிறோம்: “அரசாங்கம் எங்களிடம் மாற வேண்டிய காலம் இது, இனிமேல் நீங்கள் அதிகாரத்தில் இருக்கக் கூடாது என்று எதிர்க்கிறோம்.” மேசியாவின் பூமிக்குரிய இராஜ்யத்திற்கு விரோதமாக கலகம் செய்வதின் மூலம், கர்த்தருக்கு விரோதமாக கலகஞ்செய்கிறார்கள். அதன் பலனாக தெய்வீக அரசாங்கம் “வானத்திலிருந்து அக்கினியை” அனுப்பி அவர்களை மேற்கொள்ளும்.

இந்த கலகம் ஆயிரம் வருடயுக முடிவில் நடக்க இருப்பதாலும் அந்த சமயத்தில் மனுக்குலமானது பூரணத்தை அடைந்திருப்பதாலும், மற்ற உலக ஜனங்களிலிருந்து பழைய ஏற்பாட்டு கால பாத்திரரை இந்த பிரித்தலானது, தேவன் அவர்களுக்கென்று ஒரு விசேஷித்த நோக்கத்தை உடையவராயிருக்கிறார் என்று குறிப்பிடுகிறது. பாளையம் என்ற வார்த்தை ஒரு தற்காலிக நிலையை அல்லது ஏற்பாட்டை குறிக்கிறது. தேவன் அவர்களுக்கென்று ஒரு மேலான காரியத்தை வைத்திருக்கிறார் என்றும் குறிப்பிடுகிறது.

இந்த பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்கள் ஏதாவது ஒரு நாள் ஆவிக்குரிய சுபாவத்தை பெறுவார்கள் என்ற நமது யூகம் உண்மையாயிருந்தால், அந்த சுபாவத்தை அடைய அவர்கள் மறுபடியும் மரிக்க வேண்டிய அவசியம் இருக்காது என்பதைக் காண்கிறோம். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் உயிருடன் இருக்கும் கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் “ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே” மறுரூபமாக்கப்படுவது போல, பழைய ஏற்பாட்டுகால பாத்திரர்கள் மறுரூபமடையவார்கள். இப்படியாக அவர்கள் மாம்சீக நிலையிலிருந்து ஆவிக்குரிய நிலைக்கு மாற்றப்படுவார்களானால், கர்த்தருக்கு ஊழியம செய்வதில் உண்மையாக இருந்ததால், பூரண மனித சுபாவத்திற்குப் பதிலாக பூரண ஆவியின் சுபாவத்தை பரிசாக பெறுவார்கள்.

## கர்த்தரின் மகிமையே ராஜ்யத்தில் போற்றத் தகுந்த நோக்கம்

ராஜ்யத்தின் நன்மையான ஆளுகையின் கீழ் கர்த்தருடைய ஏற்பாடுகள் நியாயமானதொன்றாக இருக்கும் என்றும், மனுக்குலத்தில் ஒவ்வொருவருக்கும் சமமான சந்தர்ப்பம் கொடுக்கப்படும் என்றும் நாம் நிச்சயிக்கலாம். பூமியைக் குறித்து வேதவாக்கியங்களில் கொடுக்கப்பட்டுள்ள பொதுவான ஒழுங்குகள் எல்லாம் கடைபிடிக்கப்படும் என்று எதிர்பார்ப்பது நியாயமானதாக இருக்கும். வேதத்தில் எழுதப்பட்டுள்ளதாவது: “பூமியை மனுபுத்திரருக்குக் கொடுத்தார்.” (சங்கீதம் 115:16) முழு மனுக்குலமும் பூமியை சுதந்திரத்துக் கொள்ளும். தேவன் யாருக்கும் எதையும் ஒதுக்கவில்லை. ஒவ்வொருவரும் அவரவர் பங்கை குடியரசில் பெறுவார்கள்.

இந்த மாற்றமானது படிப்படியாக வரும், அவர்களது அறிவிலும் சரீர பலத்திலும் வேறுபாடுகள் இருக்கும். ஆனால் ராஜ்யமானது இந்த வேறுபாடுகளை சரிபடுத்தும். அங்கே சக்திக்கு ஒருவிதமான ஊக்குவிப்பு எப்பொழுதும் இருக்கும். அங்கே ஒருவிதமான உந்து சக்தி அல்லது ஜனங்களுக்கு உதவிட ஒருவிதமான தண்டனை இருக்கும். முன்னேறுவதற்கான கோணத்தில் ஒத்துழைப்பு தர விரும்புகிறவர்களுக்கு கர்த்தர் குறிப்பிட்ட ஊக்குவிப்புகளை தொடர்ந்து செய்வார். இணங்கிவராதவர்களுக்கு அடிகளும் தண்டனைகளும் விதிக்கப்படும் பரிசுகளும் தண்டனைகளும் ஆயிரம் வருட யுகத்தில் அமுலில் இருக்கும்.

உலக சரித்திரத்தைத திரும்பி பார்க்கும் போது சுயநலமே ஒரு பெரிய தீமையாக இருந்திருக்கிறது. அதே சமயத்தில் அது அநேக அதிசயங்களை செய்தது. இது அவர்களது நோக்கமாகவும் பழக்கமாகவும் இல்லாதிருந்தால், மனிதன் மிருகங்களைக் காட்டிலும் மிகவும் மேலானவனாக இருந்திருக்க மாட்டான். ஆகையால் இந்த குணங்களை நாம் சரியானபடி அப்பியாசப்படுத்தினால் அது அதிக ஆசீர்வாதத்தைத் தரும். ராஜ்யத்தின் ஆளுகையின் கீழ், கீழ்ப்படிகிறவர்களுக்கு மனம் மற்றும் சரீரபிரகாரமான அனைத்து ஆசீர்வாதங்களும் கொடுக்கப்படும். இதன் மூலம் சுயநலத்தின் போக்கு இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் மாற்றி அமைக்கப்பட்டு மெச்சத்தகுந்த குறிக்கோளாகவும் மாறும். மனமும் சரீரமும் அபிவிருத்தி அடைவதால், மனுக்குலத்தின் நிலைமை உயரும். சுயநலமானது மென்மேலும் கண்டிக்கப்படதக்கதாகும். பூரணத் தன்மை அடையும் பொழுது, ஒவ்வொன்றும் பூமிக்குரிய பெயருக்காகவும் புகழுக்காகவும் பண்ணப்படுவதைக் காட்டிலும் கர்த்தருடைய மகிமைக்காக செய்யப்படும்.

மனுக்குலம் அனைத்தும் படிப்படியாக ராஜ்யத்துடன் ஐக்கியத்துக்கு வருவார்கள். மறைமுகமாக அதனுடன் இணைவார்கள். எந்த ஒரு நல்ல மனிதனும் அரசாங்கத்துக்கு உதவிபுரிவது போல, மனுக்குலம் முழுவதும் தெய்வீக ஏற்பாடுகளை அவர்கள் ஏற்றுக் கொண்டு அதை மதிக்கிற அளவுக்கு ஆசீர்வதிக்கப்படுவார்கள். இப்படியாக ராஜ்யமானது ஆயிரம் வருடத்திற்கும் விரிவடைந்து, ஒருவரிடமிருந்து மற்றவருக்கு மாத்திரமல்ல, படிப்படியாக முழு பூரணத்திற்கும் விரிவடையும். நாம் வாசிக்கிறதாவது: “அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை.” (ஏசாயா 9:7) அதற்கு முன்னிருக்கிற எல்லாவற்றையும் அது ஜெயங்கொள்ளும், எதுவும் அதை தடைபண்ணாது. தீமை யாவும் அழிக்கப்பட்ட பிறகு, வானத்திலும் பூமியிலும் உள்ள சிருஷ்டிகள் யாவும் தேவனை ஸ்தோத்தரிக்கிற சத்தம் கேட்கப்படும். (வெளிப்படுத்தல் 5:13) முழங்கால் யாவும் முடங்கும், நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும். (பிலிப்பியர் 2:10,11) அவரது ராஜ்யம் ”நதி தொடங்கி பூமியின் எல்லைவரைக்கும்” ஒரு சத்துருவும் இல்லாமல் இருக்கும். (சங்கீதம் 72:8)

## கிறிஸ்துவின் எதிர்கால வேலை

ஆயிரம் வருடம் முடியும்போது, ராஜ்யம் முடிவுக்கு வரும், அதாவது கிறிஸ்து அதன் அதிகாரம் முழுவதையும் பிதாவானவரிடம் ஒப்படைப்பார். (1 கொரிந்தியர் 15:24) எனினும் பாவமும் மரணமும் ஆளுகை செய்யும்போது இருந்தது போல சட்ட ஒழுங்கு புறக்கணிக்கப்படும் என்று இதற்கு அர்த்தமல்ல, மேசியாவின் ராஜ்யமானது அந்த காலக்கட்டத்தில் மனுக்குலம் விழுந்துபோன நிலையிலிருந்து

மீள்வதற்கு உதவி செய்திருக்கும். ஆகையால் மேசியாவின் ராஜ்யம், மகா யேகோவாவின் சாம்ராஜ்யத்தின் கீழாக அதன் ஒரு பகுதியாக இணையும்படி விடப்படும்.

பிறகு நீதியானது கிரியை செய்யும். இரக்கம் அதன் பிறகு தேவைப்படாது. பரலோக பிதாவானவர் இனி தமது சிருஷ்டிகளிடம் இரக்கமுள்ள ராஜாவாக சித்தரிக்கப்படமாட்டார். அந்த சமயத்தில் அவர்கள் பரிபூரணத்தை அடைந்திருப்பதால், அவர்களுக்கு இரக்கம் தேவைப்படாது. தெய்வீக அரசாங்கத்தின் தேவைகளை சந்திப்பதில் அவர்கள் மிகவும் சந்தோஷப்படுவார்கள். இப்படி செய்து அவர்கள் ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள்.

மனுக்குலத்தை மனித பரிபூரண நிலைக்கு கொண்டு வந்து இழந்ததை திரும்ப கொடுக்கக் கூடிய வேலையை முடித்த பிறகு நமது கர்த்தரும் சபையும் எந்தவித வேலையும் இல்லாமல் விடப்பட மாட்டார்கள். வேத வாக்கியங்களின்படி நமது கர்த்தர் மகா கனம் பொருந்திய பிதாவானவருக்கு அடுத்தபடியாக அவரது வலது பாரிசத்தில் இருப்பார். பூமிக்குரிய காரியங்களை அவர் விட்டபிறகு, பரலோக பிதாவானவருக்கடுத்த அண்ட சராசரங்களின் நிர்வாக பொறுப்பை எடுத்துக் கொள்வார்.

பிதாவானவரும் கர்த்தரும் வழக்கை கேட்கவும் தீர்மானிக்கவும் நீதி பரிபாலனம் செய்யவும் எப்பொழுதும் வேலையாக இருப்பார்கள் என்று நாம் நினைக்கக்கூடாது. இப்படிப்பட்ட வேலைகள் எதுவும் தேவைப்படாது. வழக்குகளை தீர்மானிக்க தேவைப்படாத அளவுக்கு அங்கே சமநிலை இருக்கும், நடைமுறையில் ஒரு தலைமை இல்லாமல் அண்ட சராசரத்தின் அரசாங்கம் சுமுகமாக செல்லும். எனினும் யேகோவா தேவனே தலைவராக இருப்பார். பிதாவுக்கு அடுத்தபடியான அதிகாரத்தில் குமாரனும் அவருக்கு அடுத்தபடியாக சபையும் இருப்பார்கள். அதன்பிறகு என்ன வேலை நடக்கும் என்பது நமக்கு வெளிப்படுத்தப்படவில்லை –நிச்சயமற்றவைகளைத் தவிர.

தொலைநோக்கியின் உதவி மூலமாக, நாம் நிரந்தரமான நட்சத்திரங்களையும், சூரியன்களையும் அதற்குரிய நியமப்பாதை முறைமைகள் இருக்கிறது என்பதையும் நாம் அறிந்து கொள்ளுகிறோம். பூமி என்ற இந்த கிரகத்தில் குடியிருக்கும்படி தேவன் உண்டாக்கியிருக்கும் போது, மற்ற அனைத்து கிரகங்களையும் ஒரு காலத்தில் குடியிருக்க பயன்படுத்தலாம் என்று நாம் யூகிக்கலாம். மேலும் அவைகள் ஆச்சரியமான அண்ட சராசரத்தின் ஒரு பகுதியாக பரலோக பிதாவானவரின் கீழாக இருக்கும். நாம் புரிந்து கொண்டவரை, யேகோவா தேவனின் வல்லமை எல்லையற்றதாக இருக்கிறது. கோடிக்கணக்கான சூரியன்களையும் கிரகங்களையும் நாம் கவனிக்கும் போது இவை மனித சிந்தனைக்கும் எட்டாததாக அறியக்கூடாததாக இருக்கிறது. ஆகையால் கிறிஸ்துவுக்கு வேலை எல்லையற்றதாக இருக்கும் என்று நாம் யூகிப்பது நியாயமானதே. இப்படிப்பட்ட சில வேலைகள் இன்னும் பிறவாத சிருஷ்டிகளுக்கு ஆசீர்வாதமான சலுகைகள் நித்தியமாக இருக்கும். நமக்கான தேவனுடைய நன்மையின் அளவில் நாம் ஆச்சரியப்படுகிறோம். நம்மை தாழ்ந்த நிலையிலிருந்த உயர்த்தின அவர், கனம், மகிமை மற்றும் சாகாமைக்கு தங்களது அழைப்பையும் தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி உண்மையுள்ளவர்களாயிருக்கிறவர்களை முடிவற்ற எதிர்கால மகிமைக்கு உயர்த்துவார்.

## R 5183 The Arch-Enemy of the People of God

# தேவனுடைய பிள்ளைகளின் பிரதான சத்துரு

“உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றித் திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்.” (1 பேதுரு 5:8,9)

புதிய ஏற்பாட்டில் அதிகாரபூர்வமான மொழி பெயர்ப்பில் (Authorised Version) பிசாசு என்ற வார்த்தை அடிக்கடி வந்து, அநேக பிசாசுகள் உள்ளன என்ற கருத்தை தெரிவிக்கின்றன. ஆனால் இந்த கருத்து வேத வாக்கியங்களிலிருந்து வந்ததல்ல. புதிய ஏற்பாட்டில் “டையாமானியன் (diamonion) மற்றும் டையபோலோஸ் (diabolos) என்ற இரு கிரேக்க வார்த்தைகள் இப்படி மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இதில் முதல் வார்த்தை “துர்தேவதை” என்றும் இரண்டாவது வார்த்தை “பிசாசு” என்றும் மொழிபெயர்த்திருக்க வேண்டும். துர்தேவதைகள் என்பது அசுத்த ஆவிகள், விழுந்து போன தூதர்கள். ஆனால் பிசாசு என்பது சாத்தானைக் குறிக்கும். சாத்தான் என்றால் எதிராளி, சத்துரு; பிசாசு என்றால் யேகோவாவுக்கும் நீதிக்கும் எதிராளியாகும்.

சாத்தான் என்ற ஒருவன் இருக்கிறான் என்பதை அறிந்துணராதவர்கள், வேத வாக்கியத்தில் தேவனுக்கும் மனிதர்களுக்கும் மற்றும் நீதிக்கும் எதிராளியாக வருணிக்கப்பட்ட மகா பெரிய தீய சக்திக்கு கீழாக வரக்கூடிய ஆபத்தில் இருக்கிறார்கள். பரிசுத்த பவுல் “பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்தரங்களைப்பற்றி” கூறி, “வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடு” போராட்டம் உண்டு என்று சபையை எச்சரிக்கிறார். (எபேசியர் 6:11,12) மேலும் அவர் “ஆகாயத்து அதிகார பிரபு” என்றும் குறிப்பிடுகிறார். (எபேசியர் 2:2) நாம் உண்மையிலேயே அவனோடு போட்டியிட முடியாது என்று குறிப்பிடுகிறார். ஏனெனில் அவன் மிகவும் வஞ்சகமுள்ளவனும் ஞானமுள்ளவனுமாய் இருக்கிறான்.

உலகத்தில் ஒரு தீய சக்தி தொடர்ந்து தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டு, சத்தியம், நீதி மற்றும் பரிசுத்தம் ஆகியவற்றிற்கு விரோதமாகவும் அதனிமித்தம் தேவனுக்கு விரோதமாகவும் கிரியை செய்து வருகிறது. இந்த சக்தியை ஒரு காலத்தில் பரிசுத்த தூதனாக இருந்த பிசாசாகிய சாத்தான் தீவிரமாக ஈடுபடுத்திக்கொண்டு வருகிறான் என்று வேத வாக்கியங்கள் நமக்கு அறிவிக்கின்றன. அவன் தன் உள்ளத்தில் பெருமையையும் அதிக ஆசையையும் அனுமதித்து, தேவனுக்கும் நீதிக்கும் விரோதியானான். (1 யோவான் 3:8; 1 தீமோத்தேயு 3:6; ஏசாயா 14:12–14)

மனுக்குலம் சாத்தானை பார்க்க முடியவிட்டாலும் அவன் அவர்களை பார்க்க முடியும். மன ஆலோசனைகள் மூலம் அவன் அவர்களை கட்டுப்படுத்த முடியும். அவன் பல்வேறு

வழிகளில் தனது சக்தியை அப்பியாசப்படுத்தி வருகிறான். அவன் பயன்படுத்தும் மிகவும் சக்தி வாய்ந்த வழி மனித ஏஜென்டுகளை பயன்படுத்துவது – ஒருவருக்கு விரோதமாக ஒருவரை பயன்படுத்துவது ஆகும். வெளிச்சத்திற்கு பதிலாக இருளை வைப்பதே அவனுக்கு பிடித்தமான முறை. அவன் நல்லதை தீயதாகவும். சத்தியத்தை தப்பறையாகவும் சரியானதை தவறு என்றும் தோன்றும்படியாக செய்து அவன் இதைச் செய்கிறான். சாத்தான் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வதைதேடி சுற்றித்திரிகிறான் என்று பரிசுத்த பேதுரு நமது தலைப்பு வசனத்தில் கூறுகிறார். சிங்கமானது ஓசையின்றி நடக்கக் கூடியதாக இருக்கிறது. அதன் பாதத்தில் மெத்தை போன்று இருப்பதால், சப்தமில்லாமல் அதன் இரையை நெருங்குவதற்கு அதற்கு வசதியாக இருக்கிறது. சிங்கமானது இரைக்காக கிளர்ந்தெழும்பும்போது மிகுந்த சப்தத்துடன் கெர்ச்சித்து, அதன் இரைகளை பயத்தில் ஸ்தம்பிக்கச் செய்து, இப்படியாக அதைப் பிடிக்கிறது.

சபையின் எதிராளியாகிய சாத்தான் பலமுள்ளவனாகவும் சிங்கத்தை போலவும் ஜாக்கிரதை மற்றும் விழிப்புள்ளவனாகவும் இருக்கிறான். அப்போஸ்தலர் பவுல் அறிவிப்பது போல எந்த சந்தர்ப்பத்தையும் நமக்கு எதிராக பயன்படுத்த சாத்தான் விரும்புகிறான். நம்மை விழுங்குவதற்கு அவன் காத்துக் கொண்டிருக்கிறான். அவன் மிகவும் எச்சரிக்கையாக இருந்தாலும் கர்ஜனையுடன் நம்மை அவன் நெருங்குவதில்லை. அவன் நம்மை விழுங்குவதற்கு, மேற்கொள்வதற்கு, நமது ஆவிக்குரிய வாழ்க்கையை நசுக்குதவற்கு குறிப்பாக தேவன் பேரிலுள்ள நமது விசுவாசத்தை அழிப்பதற்கு எதிர்பாராத இடத்திலும் நேரத்திலும் ஓசையின்றி நம்மிடம் வருகிறான். சிங்கத்தின் காலடி ஓசையை கண்டுபிடிக்க பயிற்சி பெற்ற காதுகளை உடையவர்கள் அதின் காலடி சத்தத்தைக் கேட்பார்கள். அதில் பழக்கப்படாதவர்கள் அதின் லேசான சத்தத்தைக் கேட்கமாட்டார்கள். ஆகையால் தேவனால் காதுகள் திறக்கப்பட்டு, கர்த்தரின் சித்தத்துக்கு கீழ்ப்படிதலும் அர்ப்பணமும் ஆகிய கண்ணுக்கு கலிக்கம் போடப்பட்டவர்களுமாகிய நாம், நமது பிரதான சத்துரு நம்மை நெருங்குவதை சீக்கிரத்தில் உணர்ந்து கொண்டு எதிர்க்கிறவர்களாக இருக்க வேண்டும். தேவனுடைய வசனம் வழங்குகிற சர்வாயுதவர்க்கங்களையும் தரித்துக் கொண்டு ஆவியின் பட்டயத்தை பயன்படுத்தி அவரது பலத்தில் நாம் நிற்போமாக.

சத்துருவானவனின் தந்திரமான தாக்குதல்களை மனித பிரதிநிதிகள் (Agencies) மூலம் எதிர்பார்க்கப்பட வேண்டும் என்று அப்போஸ்தலர் பவுல் காண்பிக்கிறார். சாத்தான் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளின் இருதயங்களில் கிரியை நடப்பிக்கிறான். இந்த கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் அதிக கனத்துக்குரியவர்களாக இருந்தாலும், கர்த்தருக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் மிகவும் நெருக்கமாக அறியப்பட்டவர்களாக இருந்தாலும் சத்துருவானவனுக்கு அதிகமான ஊழியத்தை செய்கிறவர்களாக இருக்கிறார்கள். இதற்கு காரணம் என்னவென்றால் சாத்தான் தன்னை ஒளியின் தூதனாக காண்பித்துக் கொள்ளுகிறான், இருளின் தூதனாக அல்ல. ஏனெனில் தப்பறையும், பாவமும் வெளிச்சத்தின் பிள்ளைகளை எதிர்க்கும் என்பதை அவன் அறிவான். (எபேசியர் 2:2; 2 கொரிந்தியர் 4:4; 11:14,15; எபேசியர் 6:11,12)

தேவன் தேடி, அழைக்கிறவர்களுக்கு எதிராக சாத்தான் பல்வேறு முறைமைகளை பயன்படுத்துகிறான்; ஒளியின் தூதனாக தன்னை காண்பித்து அநேக தீமைகளை செய்திருக்கிறான். அவனது தொடர் முயற்சி தேவனுடைய பிள்ளைகளை கர்த்தரிடத்திலிருந்தும் அவர்களது பலியின் உடன்படிக்கையிலிருந்தும் வழிவிலகச் செய்யக் கூடியதாக இருக்கிறது. தேவன் தம்முடைய பிள்ளைகளை சாத்தான் தொடாதபடி தேவன் ஒத்தாசை செய்வார் என்பதை நாம் அறிந்திருக்கும்போது, இது அவரது வழியல்ல என்பதை அவரது கிருபை நமக்கு அறிவிக்கிறது. தேவன் வெளித்தோற்றத்தில் சாத்தான் கர்த்தரையும் அவரது பிள்ளைகளையும் பெரிய வெற்றி கொள்ளும்படி அனுமதிக்கிறார். ஆனால் இது எந்த வகையிலும் யுகங்களின் தெய்வீக திட்டத்தை குறுக்கீடு செய்யாது.

இதன் மூலம் தேவன் சாத்தானுக்கும் அவனது தீய செயல்களுக்கும் ஒத்துழைக்கிறார் என்று பொருள்படாது. உண்மையுள்ளவர்கள் மட்டுமே கடைசிவரை விடா முயற்சியுடன் நடக்கும்படியாக வழியை அந்த அளவுக்கு சுருக்கி அந்த நிலைமைகளை அனுமதித்து தேவன் அவர்களது பிள்ளைகளை சோதிக்கிறார். மற்ற அனைவரும் சீக்கிரத்தில் அல்லது சிறிது தாமதமாகவோ வழிவிலகிப் போவார்கள்.

## எதிர்த்து நிற்பதற்கான சரியான முறைமை

கிறிஸ்தவனின் போராட்டம் ஒரு விசுவாசப் போராட்டம். ''பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்'' என்று பரிசுத்த யாக்கோபு கூறுகிறார். (யாக்கோபு 4:7) இதற்கு, சாத்தனை தோல்வியடையச் செய்ய நாம் அவனிடம் போரிட முடியும், என்று ஒருவர் நினைப்பாரானால், அவர் அகந்தை உடையவராக இருக்க வேண்டும் அல்லது தனது திறமையை உயர்வாகவும் சாத்தானின் திறமையை குறைவாகவும் மதிப்பிடக்கூடியவராக இருக்க வேண்டும். எந்த ஒரு சண்டையிலும் நிச்சயமாக சாத்தானே ஜெயங்கொள்வான்.

குரோதம், பொறாமை, பகைகள், விரோதங்கள் ஆகியவைகளை சாத்தான் ஆதரவு அளித்து மனுக்குலத்தை வழிநடத்த முயற்சிக்கிறான். (கலாத்தியர் 5:19–21; 1 யோவான் 3:8) அவனது முறைமைகள் எல்லாம் வஞ்சகமானது. அவனது யோசனைகள் எல்லாம் தற்பெருமை மற்றும் அகந்தையின் வழியில் வருகின்றன. மனதின் யோசனைகளாகிய, ''உன்னால் செய்ய முடியும்; நீ மகா திறமையுள்ளவன்; பயப்படாதே; உனக்குள் என்ன இருக்கிறது என்பதை ஜனங்களுக்கு காண்பி'' போன்றவை அநேகரை விழத்தள்ள வழிநடத்தியிருக்கிறது.

ஒளியின் பிள்ளைகளை வஞ்சிக்க, சாத்தான் ஒளியின் தூதனாக மாறுகிறான். ஏனெனில் தன்னை பாவத்தின் பிரதிநிதியாக காண்பித்தால் அவர்களை வஞ்சிக்க முடியாது என்பதை அவன் நன்றாக அறிவான். ஆதாமின் விழுகையிலிருந்து சாத்தான் மனுக்குலத்தை கண்ணியில் சிக்கவைக்க நாடுகிறான். குறிப்பாக கடந்த பதினெட்டு நூற்றாண்டுகளாக சபையில் தப்பறைகளை புகுத்த, தப்பறையான கிறிஸ்தவர்களை உருவாக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறான். கிறிஸ்தவத்தில் விசுவாச கோட்பாடுகளை உருவாக்குவதில் அதிக வேலைகளை செய்திருந்தான்.

நம்முடன் பலம் பெறுவதற்கு, சாத்தானின் வசீகரிக்கும் விவாதங்களை அனுமதியாமல் சாத்தானை கர்த்தருடைய பிள்ளைகள் எதிர்க்க வேண்டும். அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமது கர்த்தர் மற்றும் அவரது அப்போஸ்தலர்களின் போதனைகளும் நமக்கு இருக்கின்றன. நாம் கர்த்தருடைய வசனங்களை அன்பு செலுத்தினால் அதனால் வழிநடத்தப்படநாடுவோம். ''தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்.'' (1 யோவான் 5:18)

நமது கர்த்தரின் வனாந்தர அனுபவம் தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் பின்பற்றக் கூடிய நல்ல ஒரு உதாரணத்தைத் தருகிறது. அவர் சத்துருவுடன் வாக்குவாதம் மற்றும் விவாதம் செய்ய நாடவிலலை. ஆனால் தவறான சிந்தனை அவருக்கு கொடுக்கப்பட்டபோது உடனே அதை எதிர்த்தார். சாத்தான் வேத வசனங்களை நன்றாக அறிந்தவனாக இருந்தான். அவற்றில் சில வசனங்களை, நமது கர்த்தரை தவறாக வழிநடத்தி தவறான மார்க்கத்தை எடுக்கும்படி, கொடுத்தான். இயேசு, பிசாசுவிடம். ''இது வேத வாக்கியமாக இருப்பதால் நான் உன்னுடைய விவாதத்திற்கு இணங்குகிறேன்'' என்று கூறவில்லை. மாறாக உடனே அதிலுள்ள கொள்கையை சிந்தித்து, எங்கே அவன் தவறு செய்கிறான் என்பதைச் சுட்டிக்காண்பித்தார். தீர்க்க தரிசனங்கள் தவறாக குறிப்பிடப்பட்டபோது, அதனுடைய சரியான அறிக்கையை அவர் கூறினார்.

இந்த மார்க்கம் பின்பற்றுவதற்கு நமக்கு நல்லதாக இருக்கிறது. சில வேத வாக்கியங்களைக் குறித்து கர்த்தருடைய பிள்ளைகளில் ஒருவரை சாத்தான் விவாதத்திற்கு இழுத்தால், இவரோ அல்லது வேறொரு சகோதரனோ இந்த விவாதத்திற்கு சரியான பொருள் கூறும் வசனத்தை ஞாபகத்திற்கு கொண்டு வந்து கூறப்பட வேண்டும். ''சாத்தானை எதிர்க்கும்படி வேத வாக்கியம் எனக்கு கூறுகிறது. இதுவே நான் செல்ல வேண்டிய சரியான மார்க்கமாக இருக்கிறது. நான் புரியாததை விவாதிக்க விரும்பவில்லை'' என்று அவர் தீர்மானம் செய்ய வேண்டும். இப்படியாக அவர் சத்துருவை ''எதிர்த்து'' அவனை கண்டனம் செய்ய வேண்டும்.

பிசாசுவின் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாக தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களை அணிந்து கொள்ளும்படி கர்த்தருடைய பிள்ளைகளை பரிசுத்த பவுல் வலியுறுத்துகிறார். தெய்வீக உதவியின்றி யாரும் சாத்தானை எதிர்கொள்ள முடியாது என்பதை அவரது கூற்று சுட்டிக்காட்டுகிறது. தேவனுடைய முழு சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ள வேண்டிய காலம் இதுதான் என்கிற உண்மையை அப்போஸ்தலர் பவுல் குறிப்பிடுகிறார். (எபேசியர் 6:13-18; வெளிப்படுத்தல் 3:10) நிலைத்து நிற்கும்படியாக யார் முழு சர்வாயுதவர்க்கங்களையும் தரித்துக் கொண்டிருப்பார்கள் என்ற கேள்வி கேட்கப்படலாம். அதின் பதில் என்னவென்றால், கர்த்தர் தமது ஜனங்களின் காரியங்களை மேற்பார்வையிட்டு, தம்மேல் நம்பிக்கையுள்ளவர்கள் அனைவரும் முழு சர்வாயுதத்தையும் தரித்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தை பெறும்படி பார்த்துக்கொள்வார் என்பதாகும்.

தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு வழங்கியுள்ள சர்வாயுதவர்க்கங்களை போடுவதற்கு பதிலாக தங்களது நேரத்தை வீணாக செலவிடுகிறார்கள். தேவன் ஏற்பாடு செய்திருக்கிறவைகளை பயன்படுத்தாதவர்கள் சத்துருவானவனின் அஸ்திரங்களை எதிர்கொள்ள முடியாது, ஏனெனில், தேவனுடைய சித்தத்திற்கு தங்களை முற்றிலுமாக ஒப்புக் கொடுத்தவர்களைத் தவிர வேறு யாரும் இந்த தீங்கு நாளில் நிலைநிற்க கூடாது என்று அவர் விரும்புகிறார். இவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி அவர்களுக்கு தேவன் உதவிகளை வழங்குகிறார். அவரைப்பற்றிய அறிவுக்கு வந்து அவரோடு உடன்படிக்கை பண்ணினவர்களுக்கு, எல்லாவற்றையும் செய்து முடிப்பதற்கு அவரது கிருபை போதுமானதாக இருக்கிறது. இந்த கிருபை வேத வாக்கியங்கள் மூலமாக, வாசிப்பதின் மூலமாக, ஒரு ஊழியத்தின் மூலமாக, ஒரு கீர்த்தனை மூலமாக வழங்கப்படுகிறது. ஆனால் பாதுகாப்பு சத்தியத்தின் வழியில் கொடுக்கப்படுகிறது. நாம் ஆவியின் பட்டயத்தை இழக்கும்போது தப்பறைக்கு எதிரான பாதுகாப்பை மட்டுமே நாம் இழப்போம்.

## தேவனுடைய ஞானம் மற்றும் அன்பில் நம்பிக்கைக்கான பாடம்

நமது ஆதி பெற்றோரின் விழுகையில் சத்துருவானவனின் தாக்கும் முறைமை நன்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தாயாகிய ஏவாள் தங்களது ஜீவனுக்கு முக்கியத்துவம் கொடுத்து, தேவன் அந்த கனியை விலக்கியிருக்கிறார் என்று கூறி, சர்ப்பத்தின் மூலம் வந்த யோசனையை எதிர்த்திருக்க வேண்டும். அவள் இப்படியாக சொல்லியிருக்க வேண்டும்; ''இந்த கருத்தை நான் ஏற்கமாட்டேன்; ஏனெனில் அப்படிச் செய்தால் சிருஷ்டிகருக்கு நம்பிக்கை துரோகமானதாக இருக்கும்.'' புசிக்கும்படியான இந்த யோசனை பிதாவாகிய ஆதாமிடம் சொல்லப்பட்ட போது, அவருக்கு வந்த, யோசனையாவது: ''நீயும் இந்த உணவில் அவளுடன் பங்குபெறு இருவரும் சேர்ந்து சாவதே மேல்; ஏனெனில் அவளில்லாமல் வாழ்க்கையில் சந்தோஷம் இருக்காது.'' ஆதாம் இந்த விஷயத்தில் அறிவை பயன்படுத்தவில்லை. வெற்றிகரமாக அதைச் செய்வதில் அவருக்கு போதுமான அறிவு இல்லாதிருந்தது. அவர் இப்படியாக கூறியிருக்க வேண்டும்: ''தேவன் அறிவார்; அதை ஏற்பாடு செய்தார். அவர் சொல்லியிருப்பது எனக்கு போதுமானது. நான் அவரை நம்பியிருப்பேன். அவரது ஞானம் மற்றும் அன்பின் பலனை நான் நம்பியிருப்பேன்.''

ஆதாம் மற்றும் ஏவாளின் அனுபவங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடம் கீழ்ப்படிதல் ஆகும். சில காரியங்களைப் பற்றி ஆராய்வதற்கு தேவையான அறிவு நமக்கு இல்லாதிருக்கலாம். விவாதத்திற்கான திறமை இன்னும் முழுமையாக அபிவிருத்தி அடையாதிருக்கலாம். அதன் பலனாக, தீமையான காரியங்கள் நமக்கு சொல்லப்பட்டால் நமது சரியான மறுமொழி: ''இல்லை, எங்களது கர்த்தராகிய தேவன் அதை தொட வேண்டாம், இல்லையென்றால் நாங்கள் மரித்துவிடுவோம் என்று கூறியிருக்கிறார்'' என்பதே. தாயாகிய ஏவாள் விவாதத்தை அனுமதித்ததால், இப்படியாக தூண்டப்பட்டாள். அவளது தவறிலிருந்து நாம் பயன்பெற வேண்டும். தேவனிடத்தில் சரியான ஒரு நம்பிக்கையும், நாம் ஞானத்தில் குறைவுள்ளவர்களாயிருக்கிறோம் என்று அங்கீகரித்தலும் நம்மை உடனே முடிவெடுக்க செய்ய வேண்டும். எந்தமாறுபாடும் அங்கே இருக்கலாகாது. நாம் முடியாது என்று சொல்ல வேண்டும்.

இப்படிப்பட்ட மனோபாவம் உடையவர்களைத் தான் தேவன் தேடிக் கொண்டிருக்கிறார். கிறிஸ்துவும் சபையும் மனுமக்களை பூரண குணத்திற்கு திருப்பிக் கொண்டு வருவதற்கே அழைத்திருக்கிறார். அநேக சமயங்களில் தேவனுடைய திட்டம் ஞானமானதாக நமக்கு தெரியாது. தெய்வீக ஞானம், நீதி அன்பு மற்றும் வல்லமையில் முழுமையான நம்பிக்கை என்ற பாடத்தை நாம் கற்றுக்கொள்ளாவிட்டால், சகலத்திலும் நாம் தேவனிடத்தில் நம்பிக்கை உடையவர்களாக இருக்க மாட்டோம்.

பிதாவானவர் தம்மை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கிற இப்படிப்பட்டவர்களை தேடுகிறார். மேலும் அவர்கள் தங்களது காரியங்களை இயக்கி வழி நடத்துகிறவர்ய, சகல ஞானமும் அன்பும் உடையவர் என்று நம்பிக்கை உடையவர்களாக இருக்க வேண்டும். நம்பிக்கை என்கிற இந்த பாடத்தை கற்றுக் கொள்ளாதவர்கள், மகிமையடைந்த சபையின் மேல் வைக்கப்படப்போகிற பொறுப்புகளுக்கு தகுதியுள்ளவர்களாக இருக்க மாட்டார்கள். நாம் இந்த பாடத்தைக் கற்றுக் கொள்வோமாக. நமது முயற்சிகளில் உறுதியாகவும் தேவனுடன் இசைவுள்ளவர்களாகவும் இருப்போமாக.

சோதனையில் உண்மையாயிருத்தல் ஜெயங்கொள்ளுகிறவர்களை அபிவிருத்தி செய்யும். எந்த வகையிலாவது நம்பிக்கை துரோகியாக இருப்பவர்களை சிறுமந்தையில் இருக்க கர்த்தர் விரும்பமாட்டார். அவர்கள் குணலட்சணத்தில் அடிப்படையான பலவற்றில் பலவீனமாக இருக்கலாம், ஆனால் அவர்கள் அனைவரும் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறார்கள். கர்த்தர் சோதனைகளிலும் துன்பங்களிலும் உண்மையுள்ளவர்களாய் இருப்பவர்களை தேடிக் கொண்டிருக்கிறார். இப்படியாக அவர்கள் தேவனுக்கு பிரியமான குணலட்சணங்களில் அபிவிருத்தி அடைவார்கள். இவர்கள் சாத்தானின் பலமான தாக்குதல்களில் திடுக்கிட மாட்டார்கள். இவைகள் சில சமயங்களில் அவர்களது விசுவாசத்தை அதிகப்படுத்தும். ஏனெனில் நமக்கு விரோதமாயிருக்கிற யாவரையும் காட்டிலும் நம் பட்சத்தில் இருப்பவர் பெரியவராயிருக்கிறார்!

துன்மார்க்கன், தேவனுடைய உண்மையுள்ள பிள்ளைகளை தொடுவதற்கான இந்த இயலாமை யாத்திரையின் வளர்ச்சியில் மிக அழகாக சித்தரிக்கப் பட்டிருக்கிறது. இடுக்கமான வழியில் நடக்கும்போது கிறிஸ்தவன் இரு சிங்கங்களை கவனித்தான். ஒரு கணத்தில் அவன் அச்சத்தால் மருளக் கூடியவனாக இருந்தான். கிறிஸ்தவன் நிலைமையை ஆராய்ந்து பார்த்து முன்னேறிச்செல்ல தீர்மானித்தான். அவன் சிங்கங்கள் அருகே வந்த போது, அவைகள் சங்கிலியால் கட்டப்பட்டிருப்பதைக் கண்டான். இதுபோலத்தான் நமது சத்துருக்கள் இருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய பிள்ளைக்கு எந்த தீங்கும் இழைக்க இயலாது; அவர்கள் கர்ஜித்தாலும் அவர்களுக்கு தீங்கிழைக்க முடியாது.

பழைய மனுஷன் (புறம்பான மனுஷன்) அழிந்தாலும் புது சிருஷ்டி (உள்ளான மனுஷன்) அபிவிருத்தி அடைய முடியும். நமது கர்த்தரின் மரணத்திற்கு காரணமாயிருக்கும்படி பிரதான ஆசாரியர்களையும், பரிசேயர்களை தன் வசப்படுத்துவதில் சாத்தான் ஜெயங்கொண்டான். ஆனால் இதனாலேயே நமது கர்த்தர் மகிமைக்குள் நுழைந்தார்.

பிதாவானவர் நமது கர்த்தருடன் கொண்டிருந்த தொடர்பின் மூலம், அவர் நம்மிடம் கொள்ளும் தொடர்பைக் குறித்து நமக்கு ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். ஆகையால் சாத்தான் நம்மை ஜெயங்கொள்ள நமக்கெதிரே நின்றாலும், இந்த "லேசான உபத்திரவம்" "மிகவும் அதிகமான கனமகிமையை உண்டாக்குகிறது" என்று நமக்கு சொல்லப்பட்டிருப்பதை நாம் அறிவோம். (2 கொரிந்தியர் 4:17)

சாத்தானை எதிர்க்க நமக்கு வல்லமையில்லை என்பதை நாம் அறிவோம். நமது கர்த்தரைத் தவிர வேறு யாரும் போதுமானவர்கள் அல்ல. அவர் சாத்தான் மற்றும் அவனது தூதர்கள் யாவரையும் காட்டிலும் உயர்ந்தவர். காணக்கூடாத காரியங்களை விசுவாசக் கண்களால் பார்க்க நாம் ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறோம். இது நம்மை முழு விசுவாசத்தில் தளராது, அசையாது இருக்க உதவிபுரிகிறது. ஆகையால் பிதாவானவர் நம்மேல் வரும்படி அனுமதிக்கிறவைகளை எல்லாம் நாம் சந்திக்கக் கூடியவர்களாக இருக்கிறோம்.

**R 5185** **St.Peter's Exhortation to the Elders**

## மூப்பர்களுக்கான பரிசுத்த பேதுருவின் உற்சாக மூட்டுதல்

"ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படி, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." 1 பேதுரு 5:6

தெய்வீக கிருபை மற்றும் தெய்வீக நோக்கத்தின் அறிவை பெற்றிருக்கிற கர்த்தருடைய ஜனங்கள் குறிப்பட்ட உயரிய நோக்கங்களை உடையவர்களாக இருக்கிறார்கள். அந்த நோக்கங்கள் சரியானதாகவும் நியாயமானதாகவும் இருக்கின்றன. அவைகள் சரியானபடி அப்பியாசப்படுத்தப்பட்டு, முறைப்படுத்தப்பட்டு, ஆளுகை செய்யப்பட வேண்டும். மெச்சத்தகுந்த உயரிய நோக்கம் இல்லாமல் யாரும் இருக்கக் கூடாது. தேவனை உயரிய நோக்கமில்லாமல் நாம் கற்பனை செய்ய முடியாது. வாழ்க்கையில் ஒருவகையான கலக்கம் அல்லது திகைப்பை கொஞ்சமாகிலும் கடந்து செல்லாதவர்கள், மிகக் குறைவாகவே தங்களுக்கோ மற்றவர்களுக்கோ காரியங்களை நிறைவேற்றுவார்கள். அவர்கள் எடுத்துக் கொண்ட எல்லா காரியங்களிலும் தோல்வியே அடைவார்கள்.

எனினும், உயர்வான மற்றும் இழிவான நோக்கங்கள் உண்டு. சில ஜனங்கள் பெரிய ஆளாக வேண்டும். கீர்த்தி பெற வேண்டும் என்ற நோக்கம் உடையவர்களாக இருப்பார்கள். மற்றவர்கள் ஆளுகை செய்ய வேண்டும் என்றும் இன்னும் மற்றவர்கள் செல்வம், சமூக மேன்மை அல்லது மனிதர்களிடையே கனம் மற்றும் அந்தஸ்து பெற வேண்டும் என்றும் நோக்கம் உடையவர்களாக இருப்பார்கள். இவையனைத்தும் சுயநல நோக்கங்கள். எனினும், வியாபாரம், சமூகம், அரசியல் மற்றும் மத காரியங்களில் கூட இன்றைய உலகில் அதிகாரம் உடைவர்களாக இவர்கள் இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் தவறான நோக்கங்கள். அவைகள் எல்லாம் தீய பலன்களையே தராதிருந்தாலும் அவையனைத்தும் சுயநலமுள்ளனவகள், தீயதை நோக்கி செல்பவைகள், அநேகர் சுயநல நோக்கங்களினால் அவைகளை செய்யும்படி தீய செயல்களுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இவைகளை அவர்களது மனசாட்சி அங்கீகரிப்பதில்லை.

கிறிஸ்தவன் தன்னால் முடிந்த உயரிய நோக்கத்தை தன் முன்னே வைத்திருக்கிறான். தேவன் தமது நாமத்திற்கென்று ஒரு ஜனத்தை உலகத்திலிருந்து அழைத்துக் கொண்டிருக்கிறார். அவர்களுக்கு முன்னே அவர் உன்னதமான நோக்கத்தை வைக்கிறார். இவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராகும்படி அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் தங்களை பரலோக பிதாவனாவர் மற்றும் கர்த்தரின் ஐக்கியத்திற்கும், நட்புக்கும் சமூகத்திற்கும் தயார்படுத்தும்படி, மனதிலும் குணலட்சணத்திலும் உயரிய பண்புகள் அனைத்தையும் அபிவிருத்தி செய்யும்படி எழுப்புதல் ஊட்டும் ஒரு நோக்கமாக இருக்கிறது. கர்த்தருடைய வசனத்தில் கவனம் செலுத்துவதற்கு அதிக ஆவலுடன் முயற்சிப்பதற்கான ஒரு தூண்டும் சக்தியாக இருக்கும்படி நமக்கு முன்பாக இந்த உயரிய நோக்கத்தை பெற்றிருப்போமாக.

இந்த மார்க்கத்தை எடுப்பவர்கள் பிதாவானவருக்கு மிகவும் பிரியமாக இருக்கிறார்கள். செய்யப்பட வேண்டிய மகா வேலைகளை அவர் பெற்றிருக்கிறார். அதை செய்யக்கூடிய ஒரு ஜனத்தை அவர் தேடிக்கொண்டிருக்கிறார். இந்த மகா வேலையின் தலைவர் இயேசு கிறிஸ்து ஆகும். வரக்கூடிய யுகத்தில் அவரது ராஜ்யமானது உலகத்தை ஆளுகை செய்து ஆசீர்வதிக்கும். அவர் நம்மிடத்தில் வைத்த தயவினால் தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வார். (எபேசியர் 2:6) இந்த பரம அழைப்பை உணர்ந்தவர்கள் தேவன் இவர்கள் எங்கே இருக்கும்படி அழைத்திருக்கிறாரோ அங்கே இருக்க விரும்புகிறார்கள். தேவன் கொடுத்திருக்கிறவைகளைப் பற்றி அக்கரை கொள்ளாதவர்கள், நிபந்தனைகளை உறுதிப்படுத்த விரும்பாதவர்கள் பரிசுக்கான பந்தயத்தில் நுழைய முடியாது.

பரம நோக்கத்தைப் பெற்றிருப்பவர்கள் புது சிருஷ்டியின் பொக்கிஷத்தை மட்பாண்டத்தில் பெற்றிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வது, மகா பரிசுத்த விசுவாசத்தில் ஒருவரையொருவர் உறுதிப்படுத்திக் கொள்ளுவதே இந்த வகுப்பாரின் உயரிய நோக்கமாக ஆகிறது. மணவாட்டி தன்னை ஆயத்தம் பண்ணினாள். (வெளிப்படுத்தல் 19:7) ஆகையால் இவர்கள் தங்களை ஆயத்தம் பண்ணவும் தேவனுடைய பிரியமான குடும்பத்திலுள்ள மற்றவர்களையும் ஆயுத்தம் பண்ண நாடவும் வேண்டும்.

### உக்கிராணத்துவத்தில் உள்ள ஆபத்து

ஒரு கண்காணியாகவோ, ஒரு மேய்ப்பராகவோ ஆக விரும்புவது ஒரு நல்ல நோக்கம். (1 தீமோத்தேயு 3:1) ஆடுகளுக்கான மேய்ப்பன் வேலையை சரியாக செய்பவனுக்கு மற்ற காரியங்களில் ஈடுபட நேரமிருக்காது. கர்த்தருடைய ஜனங்களில் மூப்பராக அழைக்கப்பட்டவர்கள் அதை ஒரு கனத்துக்குரியதாகவும் கர்த்தரிடமிருந்து வருகிற ஒரு சலுகையாகவும் நினைக்க வேண்டும். அதை நாடும்போது அவர்கள் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்; மலிவான ஆதாயத்துக்காக இருக்கக் கூடாது, உற்சாக மனதோடும் இருக்க வேண்டும். (1 பேதுரு 5:1–4) இந்த பதவியை நாடும்போது, பெருமை அபிவிருத்தி அடைதல், அதிகாரத்தை கையாளுவது போன்ற ஆபத்து இருக்கிறது என்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

மூத்த சகோதரனாக ஊழியம் செய்ய உயர்ந்த சலுகையைப் பெற்றவர்கள், தேவனுடைய பாரம்பரியத்தில் எஜமானத்துவத்தை கடைபிடிக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். தாங்கள் பிரதான மேய்ப்பர் அல்ல, கீழ்நிலை மேய்ப்பர் தான் என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும். மந்தை மீது எஜமானத்துவத்தை அப்பியாசப்படுத்தினால் அவர் தனக்கும் சபைக்கும் தீங்கை கொண்டு வருவார். ஏனெனில் இப்படி அவர் செய்வதின் மூலம் பெருமையின் ஆவியை வளர்க்கக் கூடியவராக இருப்பார்.

பரிசுத்த பேதுரு நமக்கு கூறுகிறதாவது; “பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.” (1 பேதுரு 5:5) ஆகையால் கர்த்தரின் ஊழியத்தில் ஒருவர் தாழ்மையாக இருந்தால் அவரது மார்க்கம் சபைக்கு பயனுள்ளதாக இருப்பது மட்டுமல்ல, ராஜ்யத்தில் ஒரு நிலையை பெறுவதற்கு இதுவே ஒரே வழியாக இருக்கிறது. மூப்பராயிருத்தல் கனத்துக்குரியதாக இருந்து மகா சலுகை அதில் இணைக்கப்பட்டிருந்தாலும் மகா தூண்டப்படுதலும் மகா ஆபத்தும் இருக்கிறது. பரிசுத்த யாக்கோபு கூறுகிறதாவது: “என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக.” (யாக்கோபு 3:1)

அப்போஸ்தலர், “ஆகையால் ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்” என்று கூறி, அவசியமாக செய்ய வேண்டிய வேலைகளை செய்கிற மூப்பர்களுக்கு புத்திமதி கூறுகிறார். சகலமும் தேவனுடைய வல்லமையான சக்தியினால் செய்யப்படுகின்றன. அதன் மூலம் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி அவர் செய்கிறார். தெய்வீக சித்தத்தில் நாம் குறுக்கிட முடியாது. நாம் நமது சொந்த முன்னேற்றத்தை தடங்கல் செய்யும்படி நாம் பெருமையை அல்லது சொந்த விருப்பத்தை அனுமதிக்கக்கூடும், ஆனால் தேவனுடைய திட்டத்தை நம்மால் தடை செய்ய முடியாது.

மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதில் உயர்ந்த வழியை தேட நாம் அனைவரும் விரும்ப வேண்டும். அதன் மூலம் மகா பரிசை பெற வேண்டும். அந்த வழியை பரிசுத்த பேதுரு காண்பிக்கிறார். அதுதான் “அடங்கியிருங்கள்” என்பது. ஒரு கவிஞன் கூறியிருப்பதாவது:

*தொடுவதற்கு நான் பயப்படுகிறேன்*

*அவ்வளவு காரியங்கள் அதில் உள்ளடங்கியிருக்கிறது.”*

இந்த ஆவி, பெருமை அல்லது அதிகார வார்த்தை போன்றவற்றில் அபிவிருத்தி அடையவோ, மற்றவர்களை எஜமானத்தியம் பண்ணவோ பயப்படும்படி செய்யும். ஆகையால் நம்மை தாழ்த்தி தேவன் தங்களை தாழ்த்துகிறவர்களையும் கர்த்தரிடத்தில் அதிக நம்பிக்கையுள்ளவர்களையும் ஏற்ற காலத்தில், நமது கர்த்தரின் இரண்டாம் வருகையில் உயர்த்துவார் என்பதையும் நாம் ஞாபகத்தில் வைக்கிறோம்.

சில சமயங்களில் மனத்தாழ்மையுடைய கர்த்தருடைய ஜனங்கள், இந்த குணத்தில் குறைவுபட்டவர்களைக் காட்டிலும் சபையில் குறைவாக மதிக்கப்படலாம். அகந்தையுள்ளவர்களை மதிப்பது மனுக்குலத்தின் பொதுவான இயல்பாக இருக்கிறது.

நிதானமான நற்பண்பு உடையவர்களைக் காட்டிலும் முரட்டுகுணம் உடையவர்களுக்கு தங்கள் முரட்டுதனத்தை கண்பிக்க யாராவது கிடைப்பார்கள். ஆகையால் அவர்கள் நம்மை விரும்ப மாட்டார்கள். ஆனால் நம்மில் சிறந்தது என்று அவர்கள் காண்கிறதை நாம் நாடக்கூடாது. நாம் கர்த்தருக்கு அவருடைய வழியில் ஊழியம் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம் என்பதையும் கர்த்தருடைய பார்வையில் நமது பிரதானமான பொறுப்பு நமக்கானதாக இருக்கிறது என்பதையும் நினைவுகூர வேண்டியவர்களாயிருக்கிறோம். ஏற்ற காலத்தில் நம்மை தேவன் உயர்த்தும்படி நாம் அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்க வேண்டும்.

### சத்திய அறிவில் பெருமை தீங்கானது

இவையெல்லாம் நமது மனோநிலை மனுக்குலத்தின் மனோநிலையையே ஒத்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. நமது இருதய உணர்வு பெருமையாக இருக்கக் கூடாது. ஆனால் சாந்தம், தாழ்மை, விசுவாசமாக இருக்க வேண்டும்.

பெருமை என்பது சுயநலத்தின் வித்தாக இருக்கிறது. சுயநல ஆவி பேராசையுடன் முடிந்தவரை நன்மையானதும் மதிப்புமிக்கதுமான செல்வம், கற்றல், கனம், புகழ் மற்றும் உயர்ந்த ஸ்தானம் ஆகியவைகளை சேர்க்கிறது. இந்த செல்வங்களை சம்பாதித்தல் சுயநல ஆத்துமாவை மனநிறைவு, சுதந்திரம் மற்றும் அலட்சியம் போன்ற உணர்வுகள் மூலம் மற்றவர்களின் நலவாழ்வுக்கு எதிராக வழிநடத்துகிறது. இந்த ஆவி படிப்படியாக ஆனால் வேகமாக இறுமாப்பு, பிடிவாதமான பெருமை போன்றவைகளில் அபிவிருத்தி அடைந்து, சூரியனுக்கு கீழே பூமிக்குரிய செழுமைகளில் முதிர்ச்சி அடைகிறது. சுய நலமானது தொடர்ந்து முதிர்ச்சி அடைவதால், கற்பனையான முக்கியத்துவம், கனம் மற்றும் புகழ் ஆகியவைகளின் பெருமையுடன் பீற்றிக் கொள்வதில் சந்தோஷமடைகிறது.

அடக்கம் என்ற மார்க்கம் எந்த அளவுக்கு சுலபமாகவும் ஞானமானதாகவும் இருக்கிறது. தாழ்மையின் ஆவி திமிர்பிடித்தலை தேடாது. உயர்ந்த தகுதிகளை யூகம் செய்யாது, தகுதிக்கு மேலாகவோ அல்லது அதற்கு கீழாகவோ சிந்திக்காது. தனது சம்பாத்தியம் மற்றும் சாதனைகளை அதிகமாகவோ, அல்லது குறைவாகவோ, எடைபோடாமல் நிதானமாக சிந்திக்கிறது. தாழ்மையானது எப்பொழுதும் திடமான ஒரு வியாபாரத்தை செய்ய கடுமையாக உழைக்கிறது. எனினும் அது உண்மையான தகுதியை அடைவதிலும் தெய்வீக பாராட்டுதல் மற்றும் கிருபைகளின் உண்மையான மகிமையை பெறுவதிலும் திருப்தி அடைகிறது.

சத்தியத்தை பொருத்தவரை, அதை நாமே உண்டாக்கியது போன்று பெருமையடித்துக் கொள்ளக் கூடிய மனச்சார்பு இருக்கிறது. இது எவ்வளவு ''முட்டாள்தனமானது! சத்தியத்தை நாம் உண்டாக்கவில்லை, சத்தியமானது தேவனுடையது, அறியாமை மற்றும் மூடநம்பிக்கை போன்ற இருளிலிருந்து அவரது திட்டத்தைப் பார்க்கும்படி நம்மை அவர் அனுமதித்திருக்கிறார். ஒரு அழகான் சித்திரத்தை பார்த்த ஒருவன், தானே அதை தீட்டியதுபோல பெருமையடித்துக் கொள்வானானால், நாம் அவனை ''முட்டாள் என்று சொல்ல வேண்டும். நீ அந்த சித்திரத்தை உண்டாக்கவில்லை. அதை நீ பார்க்க மட்டுமே செய்திருக்கிறாய். அதைக் குறித்து பெருமையடித்துக் கொள்ள என்ன இருக்கிறது.''

தேவனுடைய யுகங்களின் திட்டத்தின் எந்த ஒரு பகுதியையும் நாம் உண்டாக்கவில்லை. அப்படிச் செய்ய நாம் நினைத்திருந்தால் நாம் தோல்வியடைந்திருப்போம். நமது மனோபாவம், ''வா, தேவன் தீட்டியுள்ள அவரது ஏற்பாடுகளை நாம் காண்பிப்போம்'' என்று கூறும்படி இருக்க வேண்டும். இப்படியாக நாம் தேவனை மகிமைப்படுத்தி மற்றவர்களுக்கு உதவிகரமாக இருப்போம். ஏனெனில் எந்த அளவுக்கு சத்தியத்தில் பெருமை பாராட்டுகிறோமோ அந்த அளவுக்கு நமக்கும் மற்றவர்களுக்கும் தீங்கை உண்டுபண்ணுகிறோம். ''சத்தியத்தை ஞானத்துடன் போதிக்க திறமையுள்ள தெய்வீக பாண்டித்தியம் உள்ளவர்களை உங்கள் சபையை போல எங்கள் சபையும் பெற்றிருக்கிறது'' என்று உலகம் சொல்லும், ஆகையால், நாங்கள் ஆண்டவரின் தாழ்மையான, சாந்தமான, சரியான ஆவியை உடையவர்கள் என்பதை ஆரம்பத்திலேயே வெளிப்படுத்துவது தான் நமது சரியான மார்க்கமாக இருக்கும். வெளிச்சத்தைப்போட அவரது ஏற்றகாலத்தை அவரது வசனத்தில் பார்க்கும்படி தேவன் நம்மை அனுமதிக்கிறார். சித்திரமானது தொடக்கத்திலிருந்தே இருந்தது, அதன் அழகை பார்க்க முடியாதபடி மேகமும் இருளும் அதை மங்கச் செய்திருந்தது. இப்போது வெளிச்சம் வந்திருக்கிறது. கவிஞன் இப்படியாகக் கூறுகிறார்.

''வேதாகமத்தில் ஆச்சரியமானவைகளை நாம் பார்க்கிறோம்.''

சுயத்தின் பலவீனத்தையும் அபூரணத்தையும் ஞாபகத்தில் வைத்து, தன்னம்பிக்கைக்கு பதிலாக ஞானமே, அதன் அவநம்பிக்கைத் தன்மையை கட்டளையிடுகிறது. தேவனுக்கான மகா பயபக்தி மற்றும் அவரை நம்பியிருப்பதற்கு ஏற்ப அது வேறு எதைக் காட்டிலும் நம்மை பலப்படுத்தி, நமது விழுந்து போன நிலைமையின் தீமையிலிருந்து நம்மை விலக்கும்.

மனுக்குலம் கால் வைக்கிற பாதையை கண்டுபிடிக்கிறதும், மானிட அபிலாஷைகளை தொடர்ந்து சரிபார்ப்பதும் பலியை அது முழுவதும் தகனமாகிற வரை பலிபீடத்தில் வைத்திருப்பதும் உண்மையிலேயே மிகவும் கடினமான காரியம். ஆனால் இப்படியாக, தெய்வீக சுபாவத்தின் நமது இரட்சிப்புக்காக அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் பாடுபட வேண்டும். இல்லையென்றால் சாந்தமும் மனத்தாழ்மையும் உடைய நமது ஆசீர்வதிக்கப்பட்ட முன்னோடியின் அடிச்சுவட்டில் ஜாக்கிரதையாக அடிவைத்து செல்கிற உண்மையான ஜெயங் கொண்டவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுபொருளுக்கு தகுதியற்றவர்களாக ஆகிவிடுவோம். (பிலிப்பியர் 2:8,12)

இப்படியாக நாம் தாழ்மையும் உண்மையுள்ளவர்களாயிருக்கும் பொழுது கர்த்தருடைய நாமத்தை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்லுகிற தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமாக நம்மை அவர் ஆக்குகிறார். இப்படியாக நம்மை வெறுமையாக்கி, அவரது ஆவியினாலும் சத்தியத்தினாலும் நிரப்பப்பட்டு, பலத்துடன் கர்த்தருடைய சேனையிலும் அவரது மிகுந்த வல்லமையிலும் சென்று சிலுவையின் போர் வீரனாக துணிவுள்ள ஊழியத்தை செய்வோம்.

## R 5186 Humility an Element of True Courage

# பணிவு உண்மையான தைரியத்தின் மூலகம்

"நீ உன்னை ஞானியென்று எண்ணாதே; கர்த்தருக்கு பயந்து, தீமையை விட்டு விலகு." நீதிமொழிகள் 3:7

தேவனுடைய பிள்ளைகளுக்கு அகந்தையைக் காட்டிலும் அதிக ஆபத்தானது வேறு எதுவுமில்லை. அது இருதய சீர்த்திருத்தத்தையும், அதே போல பிறருக்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதையும் விசேஷமாக தேவனுடைய ஊழியத்தில் உதவிகரமாயிருப்பதையும் தடை செய்கிறது. ஏனெனில் வேதம் கூறுகிறதாவது: "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளார்களுக்கோ கிருபை அளிக்கிறார்." (யாக்கோபு 4:6) தேவனோடு இணைக்கமாக இருப்பவர்கள் தாழ்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்ற உண்மையை வேத வாக்கியங்கள் எல்லா இடங்களிலும் பிரசித்தி படுத்துகிறது. தாழ்மையுள்ளவர்களுக்கு சாந்தகுணமுள்ளவர்களுக்கு, போதிக்கக் கூடியவர்களுக்கு கர்த்தர் ஆசீர்வாதங்களை அளிக்கிறார். "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று இயேசு கூறினார். (மத்தேயு 5:5) அப்போஸ்தலர் புத்தி கூறுகிறதாவது: "ஆகையால், ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (1 பேதுரு 5:6)

இயேசு, சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறார் என்று தேவனுடைய வசனம் குறிப்பிடுகிறது. (மத்தேயு 11:29,30) இந்த இருதய மற்றும் மனத்தாழ்மை அநேகவிதங்களில் அவரது வெற்றியின் இரகசியமாக இருந்தது. அவர் தாழ்மையுள்ளவராயில்லாதிருந்தால், அவர் உயர்த்தப்பட்ட மகிமையின் நிலையை அடைந்திருக்க முடியாது.

இயேசுவுக்கும் சாத்தானுக்கும் ஒரு குறிப்பிட்ட வித்தியாசம் உண்டு. ஒருவர் தன்னை உயர்த்தினார், மற்றவர் தம்மைத் தாழ்த்தினார். (ஏசா 14:13, 14; பிலிப்பியர் 2:8) சாத்தான் கூறினதாவது: "மற்ற தூதர்களுக்கு மேலாக என்னை உயர்த்துவேன். நான் உன்னதமானவரைப் போலாவேன். அவரைப் போல் உயர்ந்த வல்லமைகளை பிரயோகிப்பேன்; காரியங்கள் என் கட்டுப்பாட்டில் இருந்தால், மகா பெரிய ஞானத்தை நான் தூதர்களிடம் காண்பிக்க முடியும்." இந்த தப்பான ஆவியினால் தூண்டப்பட்டு சாத்தான் அவனால் முடிந்ததெல்லாம் வெளிப்படுத்திக் காண்பிக்க அதிக ஆசையுள்ளவனானான்.

சாத்தான் உயர்ந்த ஸ்தானத்தை அடைய பேராசை கொண்டதே அவனது விழுகையின் இரசியமாக இருந்தது என்று வேத வாக்கியங்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. உயரிய நோக்கம் தாழ்மையை அடிப்படையாக கொள்ளும்போது மட்டுமே நல்லதாக இருக்க முடியும். தேவனுடைய ஞானத்தை மதிக்காத எந்த ஆவியும் உண்மையிலேயே முட்டாள் தனமானது.

சாத்தானுடைய ஆவி பேராசையும் பெருமையும் உடையதாக இருந்தது. தேவன் அவனுக்கு முன்னரே தேவதூதர்களிலும் உயர்ந்த அந்தஸ்தை கொடுத்திருந்து பெரும் கிருபையை அளித்திருந்தார். அவர் அளித்திருந்த கனத்திலும் ஆசீர்வாதங்களிலும் அவன் திருப்தியடையவில்லை. ஆனால் தேவன் அவனுக்கு அளிந்திருந்தவைகளைக் காட்டிலும் இன்னும் அதிகமான செல்வாக்கையும் சக்தியையும் அடைய விரும்பினான். அதிகாரத்தை பெறுவதற்கான இந்த முறைகேடான ஆசை, தெய்வீக அரசாங்கத்திற்கு விரோதமாக கலகஞ் செய்ய வழிநடத்தியது மாத்திரமல்ல, நமது ஆதி பெற்றோரை "கொலை செய்கிறவனாகவும்" (யோவான் 8:44) ஆக்கியது. அவன் தன்னுடைய பேராசையான குறிக்கோளாகிய அவர்கள் மேலான கட்டுப்பாட்டை பெறும்படியாக இப்படிக் செய்தான்.

தளபதி யேகோவாவை நீக்கிவிட்டு, தன்னை உயர்த்தி ஒரு போட்டி ராஜ்யத்தை ஏற்படுத்த நினைத்த சத்துருவானவன் எவ்வளவு குருகிய நோக்கமுடையவரையிருந்தான் பாருங்கள்! சீக்கிரத்தில் சாத்தானின் அறிவீனம் வெளிப்படுத்தப்படும். கர்த்தருடைய ஏற்ற காலம் வரும்போது, பிதாவானவருக்கு தம்மை முழுவதுமாக தாழ்த்தினவர் அதிகாரத்துக்கும் வல்லமைக்கும் உயர்த்தப்பட்டு, அகில உலக ராஜ்யத்தில் பிதாவானவரின் வலது பாரிச நிலையை பெறுவார். ஆனால் அதை பிடுங்கிக்கொள்ள முயச்சித்தவன் கட்டப்பட்டு முற்றிலுமாக அழிக்கப்படுவான்.

### உயர்வுக்கு முன்னானது தாழ்மை

நமது கர்த்தர், சாத்தானைக் காட்டிலும் முற்றிலும் வேறான மார்க்கத்தை எடுத்தார். அவர் அதிகாரத்தை அப்பியாசப்படுத்த முயற்சிப்பதற்கு பதிலாக யேகோவா தேவனுக்கு அதிக பயபக்தியை காண்பித்தார். அவர் கூறியதாவது. "என் தேவனே, உமக்கு பிரியமானதை செய்ய விரும்புகிறேன்." (சங்கீதம் 40:8) மகா நித்தியமானவரின் பிரசன்னத்தில் தாழ்மையின் மார்க்கத்தை கடைபிடித்து, சுயதேவை பூர்த்தியின் ஆவியை பெற்றிராதவராயிருக்கும்படி இயேசு பிதாவானவரால் வழி நடத்தப்பட்டார். பிதாவானவரின் வழிகாட்டுதலின் கீழாக அவர் அவமானப்படுத்தப்பட்டார். அவர் "பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார்." (எபிரேயர் 5:8) அவர் மரித்து உயர்த்தெழுந்த பிறகு தெய்வீக சுபாவத்தின் பரிசை பெற்றுக் கொண்டார். "சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக" தேவனுடைய வசனத்தின் கிருபையின் வாக்குத்தத்தங்கள் அனைத்திற்கும் சுதந்தரரானார். (எபிரேயர் 1:2)

இந்த மகா பெரிய இரண்டு உதாரணங்களும் மனதில் பதியத்தக்க ஒரு பாடத்தையும் கொடுத்திருக்கிறது. நாம் சாத்தானுடைய குறிக்கோளையும் சுயஞான மனோபாவத்தையும் பின்பற்றினால் அது நம்மை தேவனுடைய அன்பிலிருந்து பிரிக்கும். தேவனுடைய ஞானத்தை நாம் உணர்ந்து அவரது சித்தத்திற்கு நம்மை முற்றிலும் ஒப்புக் கொடுக்க வேண்டும். நாம் நமது ஆண்டவரின் அடிச்சுவடுகளில் கீழ்ப்படிதலுடன் நடந்தால், நாம் நமது கர்த்தருடன் மகிமையையும் கனத்தையும் அடைவோம்.

தேவனுடைய ஞானம் மனிதர்களுக்கு முட்டாள்தனமாக காணப்படுகிறது. இந்த உலகத்தின் ஜனங்கள் தங்கள் புரிந்து கொள்ளுதலின்படி கற்றுக்கொண்டிருக்கிறார்கள். சில சமயங்களில் ஜனங்கள் "நான் எனது சொந்த யோசனையை பெற்றிருக்கிறேன்" என்று பெருமையடித்துக் கொள்வார்கள். நாம் அறிந்திருப்பது மிகவும் குறைவு, அதுவும் பொதுவாக மிகவும் தவறாக இருக்கிறது என்பதை நாம் காண்கிறோம். அனுபவமே ஒரு நல்ல ஆசான்.

அடக்கம் என்ற குணலட்சணத்தை கிறிஸ்துவின் பள்ளியில் அதிக அளவில் நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம். இதுவே அந்த பள்ளியில் மாணவர்களுக்கு தேவையான ஒன்றாக இருக்கிறது. ஜீவ பாதை மிகவும் குறுகலான பாதையாக இருப்பதால் அகலமான பாதையை விரும்புகிறவர்கள், குறுகலான பாதையில் நடக்க நினைக்க மாட்டார்கள். அகந்தை உள்ளவர்கள் ஒதுங்குவதற்கு கர்த்தர் அனுமதிக்கிறார். அவரது வழியில் அவர்கள் செல்ல ஆரம்பித்தாலும், அவர்களது அறிவீனமான புரிந்து கொள்ளுதலுக்கு இணங்க செல்ல அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த மார்க்கத்தில் அவர்கள் தொடர்ந்தால், அது அவர்களது அழிவுக்கு வழி நடத்தும்.

### உலக ஞானம் தேவனுக்கு பைத்தியமாக இருக்கிறது

உலகத்தை பொருத்தவரை, அவர்கள் கிறிஸ்தவ தேசத்தில் வாழ்ந்தாலும் சரி, புறஜாதி தேசத்தில் வாழ்ந்தாலும் சரி, எல்லாரும் சத்திய அறிவுக்குள் வரவேண்டும். (1 தீமோத்தேயு 2:3,4) இந்த அறிவு ஆகம அறிவாக இல்லாமல் அப்பியாச அனுபவங்கள் மூலம் மனுக்குலத்திற்கு வருகிறதாக இருக்கிறது. உண்மையிலேயே முழு உலகமும் ஒரு பெரும் பாடத்தை இப்பொழுது பெற்றுக் கொண்டிருக்கிறது. புதிய யுகம் வந்து சத்தியம் தெளிவாக்கப்படும் போது, மனுக்குலமானது, தாங்கள் எந்த அளவுக்கு அறிவீனமாக இந்தோம் என்பதை உணர்ந்து கொள்வார்கள். அவர்கள் தங்களது மார்க்கத்தின் அறிவின்மையை காண்பார்கள். “அவர்களுடைய ஞானிகளின் ஞானம் கெட்டு, அவர்களுடைய விவேகிகளின் விவேகம் மறைந்து போகும்.” (ஏசாயா 29:14)

பல்வேறு வகைகளில் தாங்கள் அவலட்சணமான முயற்சிகளை எடுத்திருப்பதை மனுக்குலம் உணருவது ஒரு கடினமான அனுபவமாக அது இருக்கும். விஞ்ஞானிகளிடமும் தத்துவ மேதைகளிடமும் தேவனைப்பற்றி கேட்கும்போது, “எங்களுக்கு தெரியாது” என்று சொல்லுகிறார்கள். அவர்களது நேர்மைக்கு நாங்கள் மதிப்பளிக்கிறோம். ஆனால் அவர்கள் பூமி அமைப்பியல், பரிணாமம் முதலியவைகளில் பெருமையடித்துக் கொள்ளுகிறார்கள். மேலும், தாங்கள் அண்ட சராசரங்களின் இரகசியங்களை எல்லாம் அறிந்திருக்கிறோம் என்று கூறிக்கொள்கிறார்கள். ஆனால் உண்மைகள் அவர்களை தாக்கும்போது அவர்கள் வெட்கத்திற்குரியவர்களாகிறார்கள்! தாங்கள் எவ்வளவு அறிவீனமாக இருந்திருக்கிறோம். மற்றவர்கள் தங்களது அறிவீனத்தை அறிந்திருக்கிறார்கள் என்பதை உணரும்போது, அது அவர்களுக்கு ஒரு பெரிய தண்டனையாக இருக்கும்.

உண்மையாகவே உயர்ந்த ஆத்துமாக்கள், அறியாத பரந்த எல்லைகளைக் குறித்து தாழ்மையை உணருகிறார்கள்; தேவனுடைய இயற்கை, ஆரம்பம், அதன் வழி முதலானவைகளை அவரது வெளிப்படுத்தல்களை நன்றியுடன் ஏற்றுக் கொள்ளுகிறார்கள்; அவரது ஆச்சரியமான கிருபையின் அனைத்து இரகசியங்களையும் முழுமையாக புரிந்து கொள்ளுவதற்கு கர்த்தரின் நல்ல காலத்திற்காக காத்திருக்கிறார்கள்.

தாங்கள் அறியாததையும், வேதத்திற்கு மாறானதையும் இப்படிப்பட்ட உடன்பாடாக போதித்திருக்கிற சில பெரிய வேத பண்டிதர்கள், சத்தியத்தை அறியும்போது மிகவும் விநோதமாக உணருவார்கள். முன்னரே இவைகள் ஓரளவுக்கு உண்மையாக இருக்கிறது. கடந்த கால அநேக கோட்பாடுகளையும் கேல்வின் அவர்களின் போதனைகளையும் குறித்து அவர்கள் வெட்கப்படுகிறார்கள். பேர் கிறிஸ்தவ சபைகளின் விசுவாச கோட்பாடுகளை இன்னும் பற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவைகளை மூடுகின்றன. அதற்கேற்றாற்போல், அவர்களது மனோநிலைக்கேற்ப, அவர்கள் மிகவும் குறைவான முன்னேற்றத்தை அடைகிறார்கள்.

## R 5186 Decorum in the House of God

## தேவனுடைய சபையில் நல்லொழுக்கம்

“இந்த பாடம் **R 5809** என்ற குறிப்பின் கீழ் நவம்பர்–டிசம்பர் 2019 இதழில் வெளிவந்துள்ளது. அதைப் பார்க்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

(In the same heading, this message, has been already published in the article R5809 in the month Nov, Dec 2019 issue in Tamil. Pl.see)

## R 5187 A Peculiar Marriage

## ஒரு விநோதமான கல்யாணம்

ஆதியாகமம் 24:58–67

*“உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வைப்படுத்துவார்.” (நீதிமொழிகள் 3:6)*

ஆபிரகாம் 140 வயதான போது, சாராள் மரித்து மூன்று வருஷம் ஆனபோது, அவரது மகன் ஈசாக்கு நாற்பது வயதுடையவராயிருந்தார். தெய்வீக வாக்குத்தத்தத்தின்படியான மிகவும் ஆச்சரியமான இந்த வாரிசு, தானாக ஒரு மனைவியை தேடவில்லை. ஒருவேளை அவர் கூச்ச சுபாவமுடையவராயிருந்திருக்கலாம். ஆபிரகாம் தனது வீட்டில் தனக்குண்டான எல்லாவற்றிற்கும் அதிகாரியும் ஊழியக்காரனுமான எலியேசர் என்பவனை தன்னுடைய ஒட்டகங்களில் பத்தை எடுத்துக் கொண்டு 500 மைல் தூரத்தில் உள்ள, தான் பிறந்த ஊருக்கு செல்லும்படி அனுப்பினார். அங்கே அவரது சகோதரன் நாகோரும் அவரது குடும்பமும் அப்பொழுது வாழ்ந்தார்கள். அங்கே சென்று ஈசாக்குக்கு ஏற்ற ஒரு பெண்ணை பார்த்து அவளை அவரிடம் கொண்டு வர வேண்டும் என்ற கட்டளையுடன் எலியேசர் அங்கே சென்றார்.

இந்த முழுகதையும் மிகவும் எளிமையாக பாரபட்சமில்லாமல் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. சரித்திர ஆசிரியர்கள் விளக்கியிருக்கும் குணலட்சணங்கள் அநாகரிகமானவர்களோ, நாம் குரங்கிலிருந்து வந்தவர்கள் என்று நினைக்கக் கூடிய

அளவுக்கு கீழானவர்களோ அல்ல. அதன் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துகிற அளவுக்கு அந்த கதையானது விநோதமாக இருக்கிறது. இங்கே சொல்லப்பட்டிருக்கிற சூழ்நிலைகளின் கீழ் இந்த கதையின் ஆசிரியரின் நாயகன் தனது மனைவியை அடைவது குறித்து அபூர்வமாக சித்தரித்திருக்கிறார். நமக்கு தெரிந்திருக்கிற வரையில் இது அந்த காலத்திலும் வேறு எந்த காலத்திலும் எந்த ஜனத்தாரிலும் நடந்ததில்லை. இந்த முறைமை எந்த வகையிலும் அபூர்வமானது.

இந்த காரியமானது ஏன் இப்படி ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது என்பதை சமீபத்தில்தான் வேத மாணவர்கள் கற்றுக் கொண்டார்கள். இது ஆவிக்குரிய ஒரு பெரிய திட்டத்தை நமக்கு விளக்குவதற்காகவே ஏற்பாடு செய்யப்பட்டது. இதை நிறைவேற்றுவதற்கான செயல்முறை கடந்த பதினெட்டு (தற்போது பத்தொன்பது) நூற்றாண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது. அது தவறாக புரிந்து கொள்ளாதபடி அதன் நிழல் உண்மைப் பொருளுக்கு பொருந்துகிறது.

ஆபிரகாம் பரலோக பிதாவையும், ஈசாக்கு கர்த்தராகிய இயேசுவையும், (அவரது 40 வருடம் ஏற்ற காலத்தில் மாதிரியாக இருந்தது) எலியேசர் பரிசுத்த ஆவியையும் அடையாளப்படுத்தினார்கள். ஏற்ற காலத்தில், மணவாட்டியை, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியை அமைக்கிற தெரிந்து கொள்ளப்பட்ட கூட்டத்தை கூட்டிச்சேர்ப்பதற்கு பிதாவானவர் பரிசுத்த ஆவியை அனுப்பினார். நிழலில் ஆபிரகாம் தனது மகனுக்கு புறஜாதிகளிலிருந்து பெண் எடுக்காததுபோல், உண்மைப் பொருளிலும் தேவன் கிறிஸ்துவின் மணவாட்டியை புறஜாதிகளிலிருந்து தெரிந்து கொள்ளவில்லை. ஆபிரகாமின் உறவினர்களிடத்திலும், தேவனிடத்தில் விசுவாசம் உள்வர்களிடத்தில் எலியேசர் அனுப்பிப்பட்டது போல பரிசுத்த ஆவி, மணவாட்டி வகுப்பை தெரிந்து கொள்ளுவதற்கு விசுவாசிகளிடத்தில் மட்டுமே அனுப்பப்பட்டது.

## ஆரம்பத்தில் மணவாட்டி வகுப்பார் யூதர்கள்

யூதர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கை மூலமாக தேவனுடன் ஐக்கியமாக இருந்தார்கள். அவர்களுக்குத்தான் பரிசுத்த ஆவி முதலில் கொடுக்கப்பட்டது. பிற்பாடு தேவ கிருபையினால் கதவு புறஜாதிகளுக்கும் திறக்கப்பட்டது. அனைத்து புறஜாதிகளையும் மணவாட்டி வகுப்பில் ஏற்றுக் கொள்ளுவது என்பது இதன் பொருளல்ல. சத்தியத்தை கேட்கும்படி அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது. அதை கேட்டு அதற்கிணங்கி விசுவாசிகளாக தேவனிடம் நெருங்கவும், தேவனிடம் முழுமையாக தங்களை அர்ப்பணம் பண்ணும்போது, மணவாட்டி வகுப்பில் சேரவும் அனுமதியளிக்கப்பட்டது. உண்மையான ரெபேக்காள், உண்மையான ஈசாக்கிடம் செல்லும் பிரயாணத்தில் வரும் ஆபத்து மற்றும் சோதனைகளை பொறுமையுடன் சகித்து மணவாட்டி வகுப்பில் சேர அனுமதிக்கப்பட்டது. இந்த கோணத்தில் இன்றைய பாடம் மிகவும் ஆவலானதாகவும் அழகாகவும் மாத்திரமல்ல, உயர்ந்த போதனையாகவும் இருக்கிறது.

## கிணற்றண்டையில் ரெபேக்காள்

ஆபிரகாமின் ஊழியக்காரன், அவருக்கு கொடுக்கப்பட்ட வேலையில் மிகவும் உண்மையுள்ளவராக, தந்தைக்கும் மகனுக்கும் விசுவாசம் உள்ளவராக, ஆபிரகாமின் விருப்பத்தின்படியான சரியான பெண்ணை தேடினார். வாக்குத்தத்தத்தின்படியான வாரிசுதாரர் ஈசாக்குக்கு ஏற்ற துணையாக, வாழ்க்கைத் துணையாக இருக்கும்படி ஒரு பெண்ணை தேடினார். அவர் குறிக்கப்பட்ட இடத்திற்கு, ஆபிரகாமின் சகோதரன் நாகோரின் பட்டணத்திற்கு வந்தபோது அவர் மிகவும் எச்சரிக்கையானார். அவர் நாகோரின் பேத்தியும், பெத்துவேலின் மகளுமாகிய ரெபேக்காள் கிணற்றண்டையில் ஆடுகளுக்கு தண்ணீர் காட்டிக் கொண்டிருப்பதை பார்த்தார். இது இப்படியாக, இதைக் குறிப்பதாக விளக்கப்படுகிறது. அதாவது பரிசுத்த ஆவியானது கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராகும் எண்ணத்துடன் இருக்கிறவர்களை நெருங்குகிறது. தேவனுடைய ஆடுகளின் – தேவனுடைய ஜனங்களின் ஊழியத்தில் இணைந்திருக்கிறவர்களோடு அவர்கள் காணப்படுகிறார்கள். அவர்கள் "ஜீவத் தண்ணீரை" – ஜீவ வார்த்தைகளிலிருந்தும் வேதாகமத்திலிருந்தும் அவர்களுக்கு கொடுத்து அவர்களை இளைப்பாற பண்ணுகிறார்கள் என்று அடையாளமாக சொல்லப்படுகிறார்கள்.

தண்ணீரைக் கொடுப்பதே கன்னிகைக்கு முதல் சோதனையாக இருந்தது. எலியேசர் தண்ணீர் கேட்டார். ரெபேக்காளின் பதில்: "குடியும் உம்முடைய ஒட்டகங்களுக்கும் மொண்டுவார்ப்பேன். இங்கே ஊழியத்தின் – தயாள குணத்தின் ஆவி வெளிப்படுத்தப்படுகிறது. பரம அழைப்பிற்கு கிறிஸ்துடன் ஏற்றுக் கொள்ளப்படுகிறதற்கு முதலாவதாக தேவைப்படுகிற குணலட்சணம் சாந்தம் மற்றும் அடக்கம் ஆகும்.

உடனே எலியேசர் சில ஆபரணங்களை ரெபேக்காளுக்கு கொடுத்தார். பரிசுத்த ஆவிக்கு செவி கொடுத்து விருப்பத்தையும் அடக்கத்தையும் காண்பிக்கிறவர்களுக்கு வருகிற ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை இது அடையாளப்படுத்துகிறது. எலியேசர் வீட்டிற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டார். பெரேக்காள் பெற்ற ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை ரெபேக்காளின் நண்பர்களும் பெற்றார்கள். அவர்கள் அனைவரும் விசுவாச வீட்டாரை அடையாளப்படுத்தினார்கள். அவர்கள் அவளோடு கூட களிகூர்ந்தார்கள்.

எலியேசர் எதற்காக வந்தார் என்பதை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். ஒரு விசேஷித்த வேலை கொடுக்கப்பட்டிருந்ததை குறிப்பிட்டார். அவரது எஜமானாகிய ஆபிரகாம் சீமானாய் இருந்தார் என்றும், அவர் தமக்கு உண்டான் அனைத்தையும் ஈசாக்குக்கு கொடுத்திருந்தார் என்பதையும், அவருக்கு ஏற்ற பெண்ணை கண்டுபிடிக்கும்படி அவரது ஊழியக்காரனாகிய தன்னை அனுப்பினார் என்பதையும் விவரித்தார். தேவகிருபையினாலும் அவரது வழி நடத்துதலினாலும் ரெபேக்காளை அவர் சந்தித்ததாகவும் அவளே தனது எஜமானனின் மகனுக்கு கர்த்தர் தேர்ந்தெடுத்த பெண் என்று தாம் நம்புவதாகவும் கூறினார். இப்பொழுது கேள்வி என்னவென்றால், இதை அவள் ஏற்றுக் கொள்வாளா அல்லது மறுப்பாளா, அவர் வேறு பெண்ணை பார்க்க வேண்டுமா என்பது தான். இந்த கேள்வி ரெபேக்காளிடமே கேட்கப்பட்டது. அவள் எலியேசருடன் தூர தேசத்திற்கு சென்று ஈசாக்கின் மனைவியாக ஆவாளா என்று கேட்கப்பட்டது. அவள் உடனே "நான் போகிறேன்" என்றாள்.

இதெல்லாம் கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கும்படி அழைக்கப்படுகிறவர்களுக்கு முன்னால் வருகிற கேள்வியை குறிப்பிடுகிறது. "அவர் கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்த பிதாவுக்கு ஒரே பேறானவர்" என்பதை அவர்கள் கேட்கிறார்கள். அவரே எல்லாருக்கும் கர்த்தரானவர், "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களுக்கு" சுதந்தரர் என்பதையும் கேட்கிறார்கள். அவரோடு இணைவது என்பது, என்றைக்குமான, அவருடனான ஐக்கியத்தின் சந்தோஷத்தையும், அவரது, அனைத்து மகா ஆச்சரியமான எதிர்கால காரியங்களில் அவரோடு கூட பங்கு பெறப்போவதையும் கற்றுக் கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் ரெபேக்காள் "நான் போகிறேன்" என்று சொன்னது போல சரியான பதிலை அப்பியாசப்படுத்துகிறார்கள்.

அது, ரெபேக்காளுக்கு நெருங்கிய அவளது தகப்பன் வீட்டையும், தனது சொந்த ஜனங்களையும், தனது சொந்த நாட்டையும் விடவேண்டும்

என்று அர்த்தப்படுத்தியது. அதேபோல பரிசுத்த ஆவியின் மூலமாக பிதாவானவரின் அழைப்பை ஏற்றுக் கொண்டு கிறிஸ்துவின் மணவாட்டியாகிறவர்கள் இருக்கிறார்கள். இவர்களிடம் தீர்க்கத்தரிசியானவர் கூறுகிறதாவது; ''உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு. அப்பொழுது உன் ராஜா உன் அழகில் பிரியப்படுவார்; அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்து கொள்.''

கர்த்தரிடம் முழுமனதுடனான அன்பும் ''மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களின்'' மேல் ஆழ்ந்த விசுவாசமும் மட்டுமே, நமது பிரியமுள்ள மகிமையின் ராஜாவின் மகிமைக்குள்ளாக முடிவாக ஏற்றுக் கொள்ளப்படுவோம் என்ற எதிர்பார்ப்புடன் நமது பிரயாணத்தின் முடிவுவரை இட்டுச் செல்லும். இந்த சுவிசேஷயுகத்தில் இலட்சக்கணக்கானோர் மணவாட்டி வகுப்பில் அங்கமாவதற்குரிய பரிசுத்த ஆவியின் அழைப்பை கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அனைவரும் தாமதமின்றி ''சரி, நான் போகிறேன்'' என்று கூறவில்லை. ரெபேக்காள் வகுப்பார் மட்டுமே, ஜெயங் கொண்டவர்கள் மட்டுமே கடைசியாக தங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக, மணவாட்டியின் அங்கமாக ஆவார்கள்.

### ரெபேக்காளுக்கு அதிகமான ஆபரணம்

ரெபேக்காள், ஈசாக்குடனான திருமணத்தை ஏற்றுக் கொள்ள தீர்மானித்தபடியால், எலியேசர் தம்முடைய பொக்கிஷத்திலிருந்து இன்னும் ஆபரணங்களை அணியும்படி அவளுக்கு கொடுத்தார். என்ன அழகான ஒரு உருவகம்! மணவாட்டி வகுப்பார் பரிசுத்த ஆவியின் ஆரம்ப ஆசீர்வாதங்களை மாத்திரமல்ல, அதன்பிறகும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். பின்னான ஆசீர்வாதங்கள், எதைக் கொடுத்தும் கர்த்தருடையவர்களாக வேண்டும் என்று முழுமையாக தீர்மானித்து, ''ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறயவர்களுக்கு'' வருகிறது. பரிசுத்த ஆவியின் கிருபைகள் மேலும் அவர்களுக்கு வருகிறது. அப்போஸ்தலர் யோசனை கூறுவதுபோல, நாம் நமது விசுவாசத்தோடே மனோபலம், அறிவு, பொறுமை, அனுபவம், நம்பிக்கை, சந்தோஷம் மற்றும் அன்பையும் சேர்க்கிறோம். இந்த குணலட்சண ஆபரணங்கள் ஒவ்வொன்றையும் அணிகிற விகிதாச்சாரத்திற்கு ஏற்ப நமது குணலட்சண அழகை மேன்மை படுத்துகிறோம்.

மலை, பள்ளத்தாக்கு, வெயில், நிழல் ஆகியவைகளை கடந்து கடைசியாக ஒட்டகங்கள் ரெபேக்காளை பிரயாணத்தின் முடிவுக்கு கொண்டு வந்தது. இதே போலவே உண்மையான ரெபேக்காளுக்கும் இப்படியே நடக்கிறது. அவர்கள் தங்களது பிதாவாகிய ஆதாமின் வீட்டை விட்டு கீழ்ப்படிதல், தன்னைத்தான் வெறுத்தல் என்ற பாதையில் ஆரம்பித்தார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியின் யோசனைகளை ஏற்றுக் கொண்டு கிறிஸ்துவிடம் செல்ல தீர்மானிக்கிறார்கள். அவர்கள் உடனே தங்கள் சிலுவையை எடுத்துக் கொண்டு அவரைப் பின்பற்றுகிறார்கள். அவர்கள் வெயில், நிழல் – பிரயாணத்தின் சோதனைகள் மற்றும் துன்பத்தின் வழியாக இந்த சுவிசேஷ யுகம் முழுவதும் நூற்றாண்டுகளாக பயணிக்கிறார்கள்.

எலியேசர், ரெபேக்காளையும் அவளது தாதிகளையும் மிகவும் பாதுகாப்பாக ஈசாக்கினிடத்தில் லகாய்ரோயீ என்ற இடத்தில் கொண்டுவந்து சேர்த்தார். அதே போல பரிசுத்த ஆவி சபையை வழிநடத்தி பிரயாண முடிவில் கிறிஸ்துவின் பிரசன்னத்தில் பரோஷியாவில் கொண்டுவந்து சேர்க்கும். ஒட்டகங்களானது ரெபேக்காளின் வீட்டு வெகுமதிகளையும் ஆபரணங்களையும் அவளையும் அவளது தாதிமார்களையும் எலியேசரையும் திரும்ப ஈசாக்கின் வீட்டிற்கு கொண்டு வந்து சேர்த்தன. அதே போல பிதாவானவராலும், குமாரனாலும், மணவாட்டியின் பிரயாணத்திற்கு ஆறுதலாகவும் உதவியாகவும் அனுப்பப்படுகிற வேதவாக்கியங்கள் வழிநடத்தி வருகின்றன.

எலியேசர் ரெபேக்காளை கிணற்றில் சந்தித்தார். தண்ணீரைக் குடித்தார். தண்ணீர் சத்தியத்தைக் குறிக்கிறது. திரும்ப வரும் போது ரெபேக்காள் ஈசாக்கை லகாய் ரோயீ என்ற கிணற்றண்டையில் சந்தித்தாள்.

அந்த கால முறைமையின்படி ரெபேக்காள் முக்காடிட்டுக் கொண்டு ஒட்டகத்தை விட்டிறங்கி ஈசாக்கை சந்தித்தாள். ஆகையால் சபையானது, உண்மையான ஈசாக்கினால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, முன்னுரைத்தபடி பரிசுத்த இணைப்புக்குள் செல்ல திரையை கடக்க வேண்டும் என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன.

ரெபேக்காளின் தாதிமார்கள், அர்ப்பணம் செய்த வகுப்பாரின் ஆசீர்வாதங்களை அடையாளப்படுத்துகிறார்கள். ஆனால் தற்போது மணவாட்டி வகுப்பாரை பின்பற்றினாலும், மணவாட்டியின் முழு சலுகைகளும் சந்தர்ப்பங்களும் கிடைக்காது. ரெபேக்காளுக்கு அறிவிக்கப்பட்ட ஆசீர்வாதமாவது: ''நீ கோடான கோடி ஜனங்களுக்கு தாயாயிருப்பாயாக.'' இது சபையின் எதிர் காலத்தைக் குறிக்கிறது. ஏனெனில் இரட்சகர், அவரது மேசியாவின் ராஜ்யத்தில் ஆதாமின் இனத்தாரில் கோடான கோடி ஜனங்களை தமது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கிரயத்துக்கு வாங்கி, ஜீவனை அளிப்பவராக இருப்பார். ஆகையால் சபை, அவரது மணவாட்டி மனுக்குலத்தின் கோடான கோடி ஜனங்களுக்கு தாயாக இருக்கும். அதாவது, சபையானது அவர்களது பாதுகாவலராகவும், மேற்பார்வையாளராகவும் இருந்து அவர்கள் முழு பூரணத்திற்கு வர உதவி செய்யும்.

**R 5188** **The Ancient Worthies**

## பழைய ஏற்பாட்டுகால பாத்திரவான்கள்

எபிரேயர் 1:1–19

''எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கை வைத்தார்கள்; நம்பின அவர்களை நீர் விடுவித்தீர்.'' சங்கீதம் 22:4

இந்த பாடத்தில் பரிசுத்த பவுல், பழங்காலத்தில் விசுவாசத்தினால் செய்யப்பட்ட அதிசயங்களை, தெளிவான சித்திரங்களால் காண்பிக்கிறார். இன்னும் அவர் அந்த விசுவாசப் போரின் நாயகர்களின் பெயர் பட்டியலில் கொஞ்சம் தருகிறார். மேலும் அவர்களது வெற்றியின் வகையை வார்த்தை வண்ணத்தில் துரிதமாக தருகிறார். அவரது விளக்கக் கட்டுரையின் பரந்த அடித்தளமாக இந்த பாடத்தின் முதல் வசனம் இருக்கிறது. ''விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.'' தண்ணீரானது திடப்பொருளாக இல்லாததினால் நமது கால் அதில் பிரயாணிக்க முடியாது. அது பனிக்கட்டியாக உறைந்தால் மட்டுமே பயணிக்கமுடியும். அதேபோல நம்பிக்கை என்பது சாதாரணமாக, நமது நம்பிக்கைக்கும் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கும் போதுமானதாக இராது. நம்பிக்கையானது உறைந்து, திடப்பொருளாகி, ஒரு கெட்டியான விசுவாசமாக இருக்க வேண்டும்.

இப்படியாக நாம் எளிதில் நம்பும் தன்மையையும் விசுவாசத்தையும் வேறுபடுத்திப்பார்க்க வேண்டும். எளிதில் நம்பும் தன்மை குற்றங்காணக்

கூடியதாகவும், விசுவாசம் என்பது ஆதரிக்கத்தக்கதாகவும் இருக்கிறது. திடமாக்கப்பட்ட விசுவாசம், அறியாமை மற்றும் மூட நம்பிக்கைகள் போன்ற புதை மணலிலிருந்து நம்மை பாதுகாப்பாக கொண்டு செல்லுகிறது; தேவன் நமக்கு குறித்திருக்கிற இலக்கிற்கு நம்மை பாதுகாப்பாக கொண்டு வருகிறது. அதற்கு மானிட உறுதிக்கு மேலான, நமது அல்லது வேறு எந்த மனிதரின் கற்பனைக்கும் மேலான உறுதி தேவைப்படுகிறது. உண்மையான விசுவாசம் உடன்பாடான செய்தியை கர்த்தரிடமிருந்து தேடுகிறது. அதைக் காண ஊக்கமான முயற்சி தேவைப்படுகிறது. அதன் பிறகு அது காணக்கூடாத பொருளின் நிரூபணம் ஆகிறது.

தேவனில் இப்படிப்பட்ட விசுவாசத்துடனும், கானான் தேசத்தை இஸ்ரயேலுக்கு கொடுப்பேன் என்ற வாக்குத்தத்தத்தின் மேல் உள்ள விசுவாசத்துடனும், வேவு பார்க்க அனுப்பப்பட்ட இரண்டு மூப்பர்கள் நல்ல ஒரு அறிக்கையை கொண்டு வந்தார்கள். ஆனால் அவரது சிநேகிதர்கள் விசுவாசக் குறைவினால் கானானியரின் பலத்தை மட்டும் பார்த்து ஒரு எதிரிடையான செய்தியை கொண்டு வந்தார்கள். முதலில் வெளியரங்கமாக காணப்படாததும், விசுவாசக் கண்காளல் மட்டுமே காணக் கூடிய பலன்களை கொண்டு வருகிறதும், மனிதக் காரியங்களின் யுகா யுகங்களை கட்டளையிட்டதும், கிரகங்களை சிருஷ்டித்ததுமான தெய்வீக வல்லமையை விசுவாசத்தினால் நாம் நம்புகிறோம்.

## ஆபிரகாம், ஏனோக்கு மற்றும் நோவா

விசுவாசத்தினால் ஆபேல், காயீனைக் காட்டிலும் மேன்மையான பலியை செலுத்தினான். அவனது பலியை தேவன் ஏற்றுக் கொண்டதினால் அவரது அங்கீகாரத்தின் சாட்சியத்தை அவன் பெற்றுக் கொண்டான். ஆபேல் மரித்தாலும் அவனது சார்பாக அவனது அங்கீகாரம் இன்னும் நம்மிடத்தில் பேசுகிறது. ஆபேலின் விசுவாசமானது தேவனுக்கு அருகாமையில் இழுக்கப்படுவதற்கு ஒரு முயற்சியின் பலனாகும். பாவம் என்பது என்ன, மரணதண்டனை ஏன் கொடுக்கப்பட்டிருந்தது என்பதை உணர்ந்து கொள்ளுவதற்காகவும் அது இருந்தது. இந்த விசுவாச கருத்தின் மூலம், அவன் மிருக பலிகளை கொடுக்க வழிநடத்தப்பட்டான். இது மேலான பலிகளை அடையாளப்படுத்தியது. இதன் மூலம் மனுக்குலத்திற்கும் தேவனுக்கும் இடையே ஒரு அங்கீகாரம் கிடைத்தது.

விசுவாசத்தினால் ஏனோக்கு மரணத்தை காணாதபடி எடுத்துக் கொள்ளப்பட்டான். ‘‘அவன் தேவனோடு சஞ்சரித்தான்.... தேவன் அவனை எடுத்துக் கொண்டார்.’’ ஏனோக்கின் காரியம் இன்னும் அதை உறுதிப்படுத்தியது. விசுவாசத்தினால் நாம் அதை ஏற்றுக் கொள்ளவோம். அவர் எங்கே எடுத்துக் கொள்ளப்பட்டார் என்பதற்கான பதிவு எதுவும் இல்லை. ஆனால் அவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. (யோவான் 13:3) ஏனெனில் மாறாக நாம் கொஞ்சம் அறிவோம். மனுக்குலத்தின்மேல் தேவன் வைத்திருக்கிற மரண சாபத்தில் அவரை வைக்காதிருந்தால், தெய்வீக வல்லமையால் எப்படி அவரது ஜீவனை நூற்றாண்டுகளாக தேவன் பாதுகாத்திருக்க முடியும். உண்மையிலேயே, ஏனோக்குக்கு மரண சாபத்திலிருந்து விதிவிலக்கு இல்லை. அவர் மரண தண்டனைக்குக் கீழாக இருந்தார். அவர் மற்றவர்களைப் போல இரட்சகரின் புண்ணியத்தினால் மட்டுமே முழு பூரணத்திற்கும் ஜீவனுக்கான தெய்வீக நீதிமானாக்கப்படுதலுக்கும் வரமுடியும்.

நோவாவின் கீழ்ப்படிதலினால் ஒரு பேழையை கட்டுவதின் மூலம் அவரது விசுவாசம் வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் அந்த கால கட்டத்தில் ஒரு பேழையை கட்ட அவசியமில்லாதிருந்தது, ஏனெனில் மனிதனின் சிருஷ்டிப்பிலிருந்து அந்த காலம் வரை ஒரு துளி மழை கூட விழுந்ததில்லை. (ஆதியாகமம் 2:5) தேவன் அவரது விசுவாசத்தை ஆசீர்வதித்து, அவரை அவரது குடும்பத்தாருக்கு ஆசீர்வாதத்தின் வழியாக ஆக்கினார்.

## அவிசுவாசம் தற்போது ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதல்ல

‘‘விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாதகாரியம்’’ என்று பரிசுத்த பவுல் ஒரு பொதுவான அறிக்கையை தருகிறார். இந்த அறிக்கையின் அடிப்படையில் ஒரு மனிதன் கொண்டிருக்கிற விசுவாசத்திற்கேற்ப தேவனை பிரியப்படுத்துகிறான் என்றும், விசுவாசத்தில் குறைவு பட்டிருக்கிறதற்கேற்ப தேவனை அதிருப்தியூட்டுகிறான் என்றும் நாம் சொல்லலாம். விசுவாசத்தில் வளருவதற்கு இங்கே நாம் ஒரு தூண்டுதலை நிச்சயமாக பெறுகிறோம். ஏனெனில் தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் அவருடைய பார்வையில் அவரை பிரியப்படுத்துகிறவர்களாக இருக்கிறோம்.

ஆனால் விசுவாசமானது மனுக்குலம் அனைத்திற்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை. சிலர் தேவனிலும் அவரது வாக்குத்தத்தத்திலும் தங்களது விசுவாசத்தை உறுதிப்படுத்தக் கூடும். அந்த வாக்குத்தத்தத்தில் அவர்கள் முழுமையான அறிவை பெற்றிருக்கிறார்கள். இந்த விசுவாச அறிவில் எதையும் மென்மேலும் செய்ய துணிவுள்ளவர்களாக இருக்கக்கூடும். ஆனால் இது எல்லாரிடத்திலும் உண்மையாக இருப்பதில்லை. அநேகர் குறைவான விசுவாசத்தைப் பெற்று இன்னும் தேவனுடைய குழந்தைகளாக இருக்கிறார்கள். ‘‘கர்த்தாவே, எங்களது விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும்’’ என்று ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களது விசுவாசத்தை பின்பற்ற நாடவேண்டும். மேலும் அவர்கள் விசுவாசத்தினால் கிடைக்கப் பெற்ற வெகுமதிகளினால் ஊக்குவிக்கப்பட வேண்டும். எனினும் மற்றவர்களிடம் விசுவாசம் முற்றிலும் கூடாததாக காணப்படுகிறது. அவர்கள் தங்களது ஐந்து அறிவுக்கு அப்பால் எதையும் நம்பக் கூடாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஆறாவது அறிவை, விசுவாசத்தை, கர்த்தரிடத்தில் நம்பிக்கையை வளர்க்கவில்லை.

இவர்களைப் பற்றி நாம் என்ன சொல்லுவோம்? அவர்களது இயற்கையான பரம்பரை சுபாவம் தெய்வீக சலுகையிலிருந்து என்றைக்குமாக தவிர்க்கிறதா? ஏனெனில் அவர்கள் தேவனை பிரியப்படுத்துவதில்லை. ஏனெனில் ‘‘விசுவாசமில்லாமல் தேவனை பிரியபடுத்துவது கூடாத காரியம்.’’ இது வேத வாக்கியங்களின் போதனையில்லையா? மேசியாவின் ராஜ்யத்தின் கீழ் ‘‘கர்த்தரை அறிகிற அறிவினால் பூமி நிறைந்திருக்கிற’’ காலம் வருகிறது என்று வேத வாக்கியங்கள் அறிவிக்கின்றன; எல்லா வகுப்பினருக்கும் வந்தடையும். அது விசுவாசத்தை சார்ந்திருக்காது, விசுவாசத்தை அப்பியாசப்படுத்துகிறவர்களுக்கு மட்டும் இருக்காது. வழிப்போக்கரும், பேதையரும் சத்தியத்தை கண்டு பிடித்து, அறிந்து உணர்ந்து கொள்ளும் முயற்சியில் தவறு நேராதபடி வழியானது மிகவும் தெளிவாகவும் எளிதானதாகவும் ஆக்கப்படும்.

ஆனால் தற்காலத்தில் தெய்வீக ஏற்பாட்டின்படி விசுவாசமானது இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. ஏனெனில் பிதாவானவர் தமது குமாரனுக்கு உடன் சுதந்தரராக, மணவாட்டியாக, மற்றும் கூட்டாளியாக இருக்கும்படியாக ஒரு வகுப்பாரை தேடிக் கொண்டிருக்கிறார். அவர்களை மகா நம்பிக்கையான கனம் மற்றும் மகா ஊழியத்தில் வைக்கப்படுவதற்கு எல்லா வழிகளிலும் சோதிக்கப்பட்டு பரீட்சிக்கப்படுவது அவர்களுக்கு அவசியமாயிருக்கிறது. சர்வ வல்லவரிடத்தில் அவர்களது விசுவாசம் பூரணமாக இருக்க வேண்டும். அதே போல தேவன் பழைய ஏற்பாட்டுகால பாத்திரர்களுக்கு ஒரு விசேஷித்த வேலையை வைத்திருக்கிறார் என்பதை இன்றைய பாடத்தில் நாம் பார்க்கப் போகிறோம். ஆகவே தேவனிடத்திலும் அவரது வசனத்திலும் மகா விசுவாசத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கிறவர்களை மாத்திரமே அந்த வேலைக்கு பாத்திரராக அவர் அங்கீகரித்திருக்கிறார்.

## ஆபிரகாம் ஒரு நகரத்திற்காக காத்திருந்தார்

ஆபிரகாமிடம் வரும்போது, பரிசுத்த பவுல், ஆபிரகாம் தனது விசுவாசத்தை நிரூப்பதற்கான எடுத்த பல்வேறு வகையான நடவடிக்கைகளை விவரிக்கிறார். முன்னரே கானான் தேசத்தைப் பற்றி எதுவுமே தெரியாமல் அழைப்பை ஏற்று ஆபிரகாம் கானானுக்கு வந்தார். விசுவாசத்தினால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் ஒரு அந்நியனைப் போல கூடாரங்களில் வாழ்ந்தார். அதே போல அவரது வாரிசுகளும் வாக்குத்தத்தத்தின் உடன் சுதந்தரரர்களாகிய ஈசாக்கும் யாக்கோபும் செய்தனர். சாராளும் விசுவாசத்தை அப்பியாசப்படுத்தினாள். அவள் ஈசாக்குக்கு தாயானாள் என்றும், அந்த வாக்குத்தத்தத்துடன் அவளும் இணைக்கப்பட்டாள் என்றும், ஆபிரகாமின் வித்து, அவள் மூலமாக எண்ணிலடங்கா கடற்கரை மணலத்தனையாக இருப்பார்கள் என்றும் அப்போஸ்தலர் அறிவிக்கிறார்.

இந்த அனைத்து உயர்ந்த குணசீலர்களும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமல் விசுவாசத்தோடே மரித்தார்கள் என்று ஒட்டு மொத்தமாகக் கூறி பரிசுத்த பவுல் அறிவிக்கிறார். (வசனம் 13) அவர்கள் தூரத்திலே இருந்தவைகளை விசுவாசத்தினால் கண்டு களித்தார்கள். அவர்கள் அந்நியர்களும் நாடோடிகளுமாயிருப்பதில் திருப்தியடைந்து தங்கள் விசுவாசத்தில் அந்த அளவுக்கு உறுதியாக இருந்தார்கள். இங்கேயும் அங்கேயும் அவ்வப்போது பிரயாணம் பண்ணின நகரங்களும் அல்லது தேசங்களும் அவர்களுக்கு முழுமையாக திருப்தியை தரவில்லை. எனினும் அவர்கள் தங்கள் தாய் நாட்டிற்கு, ஆரானுக்கு திரும்பி செல்லுகிற அளவுக்கு அதிருப்தி அடையவில்லை. அவர்கள் மேன்மையான தேசத்தை, ''பரம தேசத்தை, தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்தை'' நாடினார்கள்.

முதலில் பார்க்கும் போது அப்போஸ்தலர் கூறிய இந்த வார்த்தைகளில் கருத்து வேறுபாடு இருக்க ஏதுவுண்டு. ஆபிகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு பரம தேசத்துக்கு செல்ல விரும்பினார்கள் என்று அவர் கூறுகிறாரா**?** அவர்கள் மேசியாவின் ராஜ்யத்தில் புதிய எருசலேமில் ஒரு இடத்தை, மணவாட்டியாக, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக ஆகும்படி நாடுகிறார்கள் என்று அவர் கூறுகிறரா**?**

அது நமது எண்ணமல்ல, அப்படி நினைப்பதற்கு அவர்கள் பரத்துக்குரிய வாக்குத்தத்தத்தை பெற்றிருக்கவில்லை. அவர்கள் மாம்சீக சுபாவத்திலிருந்து ஆவிக்குரிய சுபாவத்தை மாறக்கூடியதைப்பற்றிய யோசனை வேதவாக்கியங்களில் எதுவும் சொல்லப்படவில்லை. அவர்கள் பெற்றிருந்த அனைத்து வாக்குத்தத்தங்களும் பூமிக்குரியதே, பூமிக்குரியது மட்டுமே. ''நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் இருக்கும்படி கொடுத்தேன்.'' நாம் புரிந்து கொண்டதின்படி, ''வனாந்திரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து புஷ்பத்தைப் போல செழிக்கக் கூடிய,'' ''வனாந்தரத்தில் தண்ணீர்களும் பாய்ந்ததோடக்கூடிய,'' சீக்கிரத்தில் வர இருக்கிற, பரதீசைப் போல இருக்கக் கூடிய தேசத்திற்காக அவர்கள் காத்திருந்தார்கள். கர்த்தருடைய ஆசீர்வாதம் சாபமாகிய பாவம் மற்றும் மரணத்தை நீக்கிப்போடும். மேசியாவின் நீதியின் ஆளுகையில் மனுக்குலம் தெய்வீக சித்தத்திற்கு இசைவாக்கப்படுகிற இந்த தேசத்தைத்தான் மனுக்குலம் சுதந்தரித்துக் கொள்ள தேவன் தீர்மானித்திருக்கிறார்.

ஆபிரகாம், ''தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்தை'' தேடினார் என்பதை நாம் வாசிக்கும்போது, முடிவாக தேவனிடமிருந்து பூமிக்கு இறங்கி வரும் தேவனுடைய நகரமாகிய புதிய எருசலேமுக்கே நமது எண்ணம் இயற்கையாக செல்கிறது. ஆனால் அது சொல்லர்த்தமான ஒரு நகரமல்ல. முழு பகுதியும் அடையாள பாஷையில் இருக்கிறது. புதிய எருசலேம் மேசியாவின் ராஜ்யமாக இருக்கும். இது பூமியின் மறுசீரமைக்கப்பட்ட சமூக முறைமைக்கு அரசாங்க மையமாக, அல்லது தலை நகரமாக இருக்கும். இங்கேயிருந்து தேவனுடைய பிரமாணம், தேவனைப் பற்றிய அறிவு, தேவனுடைய ஆசீர்வாதம் செல்லும். அங்கேயிருந்து தான் அதிகாரமும் வல்லமையும் பிரயோகிக்கப்படும். அது ஆயிரம் வருடம் நீதியாக உலகத்தை அரசாண்டு பாவத்தையும் மரணத்தையும் பாவத்தின் அனுதாபிகளையும் நீக்கிப்போடும்; நீதியையும் சத்தியத்தையும் நேசிக்கிறவர்கள் அனைவரையும் உயர்த்தும்.

புதிய எருசலேமானது, அடைப்படையில் ஆவிக்குரிய நிலையில் இருக்கிற மகிமையின் சபையாக இருக்கும். மேசியாவிடமிருந்து தோன்றுகிற தேவனுடைய ஆட்சி அல்லது ராஜ்யம் அது பூமிக்குரிய பிரதிநிதிகளையும் உடையதாக இருக்கும். தங்களது காலத்தில் விசுவாசமுள்ளவர்களாகக் காணப்பட்ட ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தீர்க்கதரிசிகள் மற்றும் அனைத்து பழங்கால பாத்திரவான்களும் பூமியில் பிரபுக்களாக, காணக்கூடாத மேசியா மற்றும் அவரது மணவாட்டியின் முழு அதிகாரம் மற்றும் வல்லமைக்கு பிரதிநிதிகளாக இருப்பார்கள். (சங்கீதம் 45:16)

இவைப்பற்றி இயேசுவின் பிரசங்கத்தில் கூறுகிறதாவது: ''நீங்கள் ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிறவர்களாகக் காண்பீர்கள்.'' ஆனால் மேலும் அவர் கூறியிருப்பதாவதுன்: ''கொஞ்ச காலம் உலகம் என்னை காணாது.'' சபையைப் பற்றி அப்போஸ்தலர் அறிவிப்பதாவது: ''நாம் அவருக்கு ஒப்பாயிருப்போம்.'' நாம் அனைவரும் மறுரூபமாக்கப்படுவோம். மாம்சமும் இரத்தமும் ஆவியின் நிலையிலிருக்கிற பரலோக ராஜ்யத்தை சுதந்தரிக்காது.

இதன் சாராம்சம்: ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் கடந்தகால விசுவாசிகள் அனைவரும் மேசியாவின் ராஜ்யத்தின் நிர்வாகத்தின் கீழ் நிறைவேற்றப்பட போகிற வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உயிர்த்தெழுதலுக்காக காத்திருந்தார்கள். இந்த அரசாங்கம் தான் ஒரு நகரத்தால் குறிக்கப்படுகிறது. பரி. பிட்டர்ஸ்பர்க் ரஷ்யாவையும், பாரீஸ் ஃபிரான்சையும், லண்டன் மகா பிரிட்டனையும், பெர்லின் ஜெர்மனியையும், வாஷிங்டன் அமெரிக்க ஐக்கிய நாடுகளை குறிப்பது போல் புதிய எருசலேம் மேசியாவின் ராஜ்யத்தை குறிப்பிடுகிறது.


ஏழாம் சபையின் தூதனாகிய

சகோ, **C.T.** ரசல் அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்,

வெளியிடுபவர்:



சகோ, **R.** செல்வராஜ். சென்னை வேதமாணவர் சபை.

எண்: 22. முதல் தெரு. ராஜீவ் நகர். காலடிப்பேட்டை. திருவொற்றியூர்.

சென்னை- 600 019, கைபேசி: 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com

Website : www.thestudiesinthescriptures.com



**FOR PRIVATE CIRCULATION ONLY**